விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 216 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 07 ஞாயிற்றுக்கிழமை (23.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜீலை 40ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று



(யாழ்ப்பாணம்)
கறுப்பு ஜூலை கலவரத்தின் 40ஆம் ஆண்டு நினைவேந்தல் நாள் இன்றாகும்.
கறுப்பு யூலை (ஆடிக் கலவரம்) என்பது ஜூலை 23, 1983 தொடக்கம் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள்

19



## யாழ்.மாவட்டத்தில் திரிபோஷா திருட்டு

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் குழந்தைகளுக்கான திரிபோஷா சத்து உணவு வழங்கலில் முறைகேடுகள் இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
மாவட்டத்திற்கென சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட திரிபோஷா ஒரு மாதத்திற்கு விநியோகிக்கப்பட்டுவரும் நிலையில் கடந்த ஜூன் மாதம் குறிப்பிட்ட ஒரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு வழங்கப்பட இருந்த

19



அனுமதி பெற்றே
### ஆலயங்களில் யானைகளை பயன்படுத்தலாம்
யாழ்.அரச அதிபர்

06ஆம் பக்கம் பார்க்க

## எதிர்வரும் 26ஆம் திகதி சர்வகட்சி மாநாடு
# 13வது திருத்தச் சட்டம் தொடர்பில் தீர்மானம்
### தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்படும்

**(கொழும்பு) அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ள எதிர்வரும் 26ஆம் திகதி சர்வகட்சி மாநாடு கூட்டப்படவுள்ளது. குறித்த மாநாட்டில் மாகாண சபைத் தேர்தல், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் 13வது அரசியலமைப்புத் திருத்தம் உள்ளிட்ட தமிழ் மக்கள் தொடர்பான விடயங்கள் பற்றி கலந்துரையாடியதாகவும் அவர் கூறினார்.
குறித்த கலந்துரையாடல்கள் சாதகமான முறையில் முடிவடைந்ததுள்ளதாக அவர் இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.
"ஜனாதிபதி தலைமையில் இந்தியா சென்றிருந்த தூதுக்குழுவில் நானும் பங்கேற்றிருந்தேன், பிரதமர் நரேந்திர மோடியுடனான இரு தரப்பு சந்திப்பின்

19

கரவெட்டி மேற்கில்
### விபரீத முடிவெடுத்த ஒருவர் மரணம்

(கரணவாய்)
கரவெட்டி மேற்கில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரி

19

## மீசாலையில் ரயில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)
மீசாலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ரயில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கிளை வீதி ஒன்றில் இருந்து ஏ9 பிரதான வீதிக்கு மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்ட முதியவரை கொழும்பில் இருந்து வந்த உத்தர தேவி புகையிரதம் மோதியுள்ளது.
இதில் சிற்றம்பலம் வீதி மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த 68 வயதான செ.பரமசாமி

19

## தமிழர்களுக்கான அரசியல் தீர்வை பிரதமர் மோடி ஏற்றுக் கொண்டார்
### இந்திய விஜயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ்



(கொழும்பு)
தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தை ஜனாதிபதி ரணிலால் முன்வைக்கப்பட்ட யோசனையை பிரதமர் மோடி ஏற்றுக் கொண்டார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ

19

## ரணில் இந்தியா சென்றவேளை சீன குழுவோடு மகிந்த கலந்துரையாடல்



(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடனான சந்திப்பை நிறைவு செய்து நாடு திரும்பியுள்ளார்.
குறித்த சந்திப்பு இடம்பெற்ற சமகாலத்தில் இலங்கையில் உள்ள சீனாவின் சிறப்பு ராஜதந்திர குழு ராஜபக்ஷ தரப்பை சந்தித்து பேசியுள்ளது.
சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்

19


## அரச வணிகங்களுக்கு பணம் வழங்க முடியாது
### நிதி இராஜாங்க அமைச்சர்

(அநுராதபுரம்)
அரச வணிகங்களை நடத்துவதற்கு திறைசேரியால் இனி பணத்தை வழங்க முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.
அநுராதபுரம் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 26 . 10 . 1946

உதிர்வு 22 . 07 . 2023

## பொன்னையா இராசரத்தினம்

**(ஓய்வூதியர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)**

வசாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் பழனியாண்டவர் வீதி கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் அவர்கள் 22.07.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இலட்சுமி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் பார்த்தீபன், காண்டீபன், சோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மீரா, சங்கீதகுமாரி, புவனராஜ் ஆகியோரின் மாமனாரும் சாஜகான், சரண்யா, சாருஜன், கிஷான், கிருத்திக், யர்விஸ், பகவிந் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், பாலச்சந்திரன் மற்றும் சதானந்தன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.07.2023 பி.ப 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பழனியாண்டவர் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

தகவல்:-
**குடும்பத்தினர்**
**077 844 8390**

(16380)


**Car For Rent**

Altro கார் வாடகைக்கு

**077 332 2433**

(16391)

**விற்பனைக்கு**

3 கண்ணாடி அலுமாரி (சோக்கெஸ்) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 493 7585**

**விசா ஆலோசனைகள்**

- **ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான அரிய வாய்ப்பு**
- **கனடா** இலகுவில் செல்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்
- **கொசோவா** நாட்டில் Working visa 15 நாட்களில் பெற்றுத்தரப்படும். (முற்பணம் எதுவும் இல்லை) அனுபவம் தேவை இல்லை
- **சர்பியா** நாட்டில் Tailor வேலைவாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

(C-6939)

**Hybrid International Hub Pvt Ltd, Jaffna**

**076 250 0098, 021 222 1265**

**பெண் வேலையாள் தேவை**

யாழ். நகரில் அமைந்துள்ள மூக்குக் கண்ணாடியகத்திற்கு விற்பனையாளர் தேவை. முன்அனுபவம் உள்ளவர்கள் வரவேற்கத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**T.P : 077 276 7236**

**இல. 163, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

(16382)

**பகுதிநேர வேலைவாய்ப்பு**

வட மாகாணத்தில் முதல்தரமிக்கதும் தனித்துவமிக்கதுமான எமது சதுரங்க பயிற்சி நிலையங்களின் பின்வரும் இடங்களிற்கு

**அலுவலக உதவியாளர்கள்**

தேவை.

வயது எல்லை 18 – 50 வயதிற்கு இடைப்பட்டவர்கள். ஆண்/ பெண் (சதுரங்க வீரர்கள்/ சதுரங்கம் ஓரளவு தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)

**AAA Grand Master Chess Trainers Center**

நல்லூர்/ வவுனியா/ சாவகச்சேரி


WhatsApp No.

**076 108 6777**

(16377)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு **076 636 3378, 076 097 3127**


# மரண அறிவித்தல்



## திரு. சின்னையா இந்திரகுமார் (கனடா)

மலர்வு **02.03.1952**

உதிர்வு **20.07.2023**

பொற்பதி வீதி, கொக்குவில், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா இந்திரகுமார் அவர்கள் 20.07.2023 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - தனபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி அஜந்தா (கனடா) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி சுயானி(கனடா), திருமதி அபிராமி(கனடா), ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் திரு.அனிருத்தன்(கனடா), திரு.வினோத்குமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அமரர் சரஸ்வதி, திரு.கோபாலகிருஷ்ணசாமி (கொக்குவில்), அமரர் தளையசிங்கம், திரு.சற்குணராஜா (லண்டன்), அமரர் பரதகுமார் ஆகியோரின் அன்புத் தம்பியு மாவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொற்பதி வீதி,**
**கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**


*தகவல்:*
**திரு.சி.கோபாலகிருஷ்ணசாமி**
**(ராசா அண்ணன்)**
**077 186 9951**

(16376)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2025 இற்கு முன் மன்னார், பூநகரியில் சோலார் மற்றும் காற்றாலை திட்டங்கள்

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

**மன்னார் மற்றும் பூநகரியில் உருவாக்கப்படவுள்ள 500 MW மெகாவாட் சோலார் மற்றும் காற்றாலை திட்டத்தை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்னதாக முடிக்க கௌதம் அதானி உறுதியளித்துள்ளார் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று தெரிவித்தார்.**

இந்தியாவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவுடனான சந்திப்பின் போதே அதானி இந்த உறுதிமொழியை வழங்கியதாக அமைச்சர் கூறினார்.

இந்த விஜயத்தின் போது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒத்துழைப்பு மற்றும் திருகோணமலை எரிசக்தி மைய அபிவிருத்தி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இலங்கை மின்சார சபை மற்றும் இந்தியாவின் கூட்டு முயற்சியினால் சம்பூர் சோலார் பூங்காவிற்கான சக்தி வழங்கல் அனுமதி வழங்கப்பட்டதாகவும் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

மேலும், இந்தியா- இலங்கை கிரிட் இணைப்பு, பசுமை ஹைட்ரஜன் திட்டம், எண்ணெய் குழாய் இணைப்பு மற்றும் எரிசக்தி துறை முதலீடுகள் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றன.

புதுடில்லியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, மூத்த அரசாங்க அதிகாரிகள் மற்றும் முதலீட்டாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்ட விடயங்கள் பேசப்பட்டதாக அமைச்சர் கூறினார். (4)

---

### தடுப்பூசி போட்ட குழந்தைகளுக்கும்
# அம்மைநோய் தாக்கும்
### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகளுக்கு கூட அம்மை நோய் தாக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவ நிலைமைகள் அல்லது போசாக்கு குறைபாடுகள் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறையும் குழந்தைகளுக்கு அம்மை நோய் தாக்கும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை பிரதி மருத்துவப் பணிப்பாளர் மருத்துவர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டிற்குப் பிறகு, அம்மை நோயை ஒழித்த நாடாக இலங்கை கருதப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (4)

---

### ஜனாதிபதித் தேர்தல்
# பணமதிப்பீடு செய்ய
### ஜனாதிபதி ரணில் உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை அடுத்த வருடம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் உள்ளக தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டாலும் அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் தேர்தல் நடத்தப்படும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கான நிதியை அடுத்த வருட வரவு- செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.எம்.எல். ரத்நாயக்க மற்றும் ஆணைக்குழுவின் ஏனைய அதிகாரிகளை கடந்த வார இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடுகள் தேவை என்று ஆணைக்குழுவிடம் கேட்டுள்ள ஜனாதிபதி, இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை தயார் செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (4)

---

# நாடு திரும்பினார் ரணில்

(கொழும்பு)

இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாடு திரும்பினார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் ஜனாதிபதி நேற்று முன்தினம் இரவு நாட்டை வந்தடைந்ததாக அததெரண விமான நிலைய செய்தியாளர் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

---

# வெளிநாட்டு கையிருப்பை பொறுத்தே வாகன இறக்குமதி
### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)



இலங்கையில் எதிர்வரும் காலங்களில் முறையாக வாகன இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்வதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டிருந்த அனைத்து வாகன உதிரிப்பாகங்களுக்குமான தடை தற்போது நீக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உதிரிப் பாகங்களுக்கான தடை முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய வெளிநாட்டு கையிருப்பைக் கருத்தில் கொண்டு மத்திய வங்கியின் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்து கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கத் தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய, பொது போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், தொழில்துறை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள், பொது போக்குவரத்திற்கு மாற்றாக பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு முன்னுரிமை அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் வாகனங்களின் வழமையான இறக்குமதியை மேற்கொள்வதற்கு, நாட்டிலுள்ள வெளிநாட்டு கையிருப்பை உன்னிப்பாகக் கண்காணித்து முடிவெடுக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (4)

---

# இலங்கை வாழ் இந்தியர்களுக்காக 3000 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் மேம்பாட்டுக்காக பாரத பிரதமர் நரேந்திர மோடி வழங்கவுள்ள 3 ஆயிரம் மில்லியன் ரூபா, கல்வி மற்றும் சுகாதாரத்துறை அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும். இதில் மலையகத்துக்கான பல்கலைக்கழக திட்டமும் உள்ளடங்கும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இரு நாட்கள் இந்திய பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

மலையக பெருந்தோட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபா என்று உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதார துறைக்கு அந்நிதி பயன்படுத்தப்படும்.

இந்திய வம்சாவளி மலையக தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையிலான அரச அங்கீகாரத்துடனான தேசிய விழா நவம்பரில் நடத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4)

---

# மரம் வீழ்ந்ததில் இருவர் பலி
### மூவர் காயம்

(கொழும்பு)

அக்குரஸ்ஸ அமலகொட சந்தியில் பாரிய மரமொன்று வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனம் பழுதுபார்ப்பதற்காக வந்தவர்களே இவ்வாறு மரம் வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளனர்.

அப்பகுதியில் வீசிய பலத்த காற்று காரணமாக குறித்த மரம் முறிந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தம்பு கனகசபாபதி



திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கனகசபாபதி அவர்கள் நேற்று (22.07.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற தம்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லலிதா பூசணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வநாயகம், சந்திரமலர் (இந்தியா), இராசநாயகம், அருள்நாயகம் (சுவிஸ்), சுசீலா, சரோஜா (சுவிஸ்), அமரநாயகம் அவர்களின் அன்பு மைத்துனரும் சுபலட்சுமி, வரலட்சுமி, மாதவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை), தனலட்சுமி (ஜேர்மன்), வரநிதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் விவேகானந்தன், பகீரதன், நந்தினி (ஆசிரியை- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), யோகலிங்கம் (ஜேர்மன்), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிஷா (லண்டன்), துஷாரா, நிரோஷா, அனந்தசாயி, கீர்த்திகா, மதுஷாயினி, ரிதுஷிகன், அன்ஜா, ஆருஜன், ஆருஜா, ஜனுஸ், ஜஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2023) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புதிய செங்குந்தா வீதி திருநெல்வேலி கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (16392)

தகவல்:-
குடும்பத்தினர்

# கடந்த 3 வருடங்களில் வீதி விபத்துக்களால்

## 7 ஆயிரத்து 172 பேர் பலி

(கொழும்பு)

கடந்த மூன்று வருடங்களில் நாடு முழுவதும் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 7 ஆயிரத்து நூற்று எழுபத்தி இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த மூன்று ஆண்டுகளில் 67, ஆயிரத்து 687 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு வீதி விபத்துக்களில் 2 ஆயிரத்து 515 பேரும், 2021 இல் 2 ஆயிரத்து 513 பேரும், 2020 இல் 2 ஆயிரத்து 144 பேரும் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தின் சமீபத்திய வருடாந்த அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 40 அபாயகரமான வீதி விபத்துகளும், 2021 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 414 அபாயகரமான வீதி விபத்துகளும், 2022ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 395 ஆபத்தான வீதி விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.(ம-7)


கொடிகாமம் கெற்பேலி பகுதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பண்ணைக்கு

**ஆண் வேலையாட்கள் தேவை**


- மாடு மேய்க்க தெரிந்திருப்பவராக ஏனைய பண்ணை வேலைகளும் செய்யக்கூடிய தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- தங்கிநின்று வேலை செய்பவர்கள் மாத்திரம் உள்வாங்கப்படுவர். பண்ணையில் தங்கியிருக்கும் மற்றும் வேலை நேரங்களில் மதுபானம் அருந்தல், புகைத்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
- விடுமுறை:- மாதத்தில் மொத்தம் 5 நாட்கள் சம்பளத்துடனான விடுமுறை உண்டு.
- வயது எல்லை:- 25 - 50 வயது.
- தங்குமிட வசதி உண்டு
- சம்பளம்:-
  அடிப்படை சம்பளம் + விசேட ஒதுக்கீட்டு கொடுப்பனவுகள்+ மொத்த EPF&ETF அடங்கலாக சுமார் 53,105/=. (16389)

தொடர்புகளுக்கு:- 076 200 1700


# மரண அறிவித்தல்

## இளையதம்பி சோமசுந்தரம்

### (திரவியம்)



மலர்வு
18.05.1942

உதிர்வு
22.07.2023

அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி சோமசுந்தரம் (திரவியம்) நேற்று (22.07.2023) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தில்லையம்பலம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சேதுநாயகி (கிளி) அவர்களின் அன்புக் கணவரும் சேதீஸ்வரன் (Swiss), வளர்மதி (Germany), தில்லைநாயகி (Kodikamam), சிவபாலன் (London), இராசநாயகி (Meesalai), சுகந்தினி (Germany), ஜேந்தினி (Meesalai), கலைச்செல்வி (Mannar), கஜன் (Kacchai) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திராதேவி, பரமநாதன், அமரர் சற்குணநாயகம், அமுதினி, சோதீஸ்வரன், நடராசா, தரணீஸ்வரன், தமிழினி ஆகியோரின் அன்பு மாமனாரும் செந்தூரன், சிந்துஜன், சுகிந்தன், அமரர் சோபிகா, அனோஜன், சேந்தன், நளினி, நிலானி, நிஷானி, சஜீவா, மதுமிதா, மதுசன், ஆதிசா, தனப்பிரியன், பவித்திரா, லோகிதா, சங்கீதன், சுவேதிகா, அஜந்தா, ஆருஜன், அஞ்சலி, நுகட்சிகா, பார்டீபன், எழில், ஒளிநிலா, ரசிகலா, ரதீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, தனபாலசிங்கம், பூபாலசிங்கம், சிவக்கொழுந்து, குலராசசிங்கம் மற்றும் இராசையா, நல்லம்மா, சரஸ்வதி, விஜயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்
076 622 4603 / 077 509 9806

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய், குழந்தையை கொலை செய்த சந்தேக நபர் கைது

(கொழும்பு)

அகுருவாதோட்டையில் இளம் தாய் மற்றும் மகளை படுகொலை செய்த பிரதான சந்தேகநபரை அகுருவத்தோட்ட பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் வரகாகொட சல்காஸ் மாவத்தை பகுதியிலுள்ள அவரது வீட்டிற்கு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை காலை அங்குருவாதொட்ட பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆனந்த சில்வா தலைமையிலான குழுவினர் அங்கு திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

எனினும் குறித்த சந்தேகநபர் வீட்டில் காணப்படாத நிலையில், அதன் பின்பகுதியிலும் அதனைச் சுற்றியிருந்த காடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட முழுமையான தேடுதலின் போது சந்தேகநபர் வாழை மரங்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அவரை துரத்திச் சென்று பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளனர். (4)

# 24 கடலோரப் பகுதிகள் சுற்றுலா இடங்களாக அடையாளம்

(கொழும்பு)

இலங்கையில் 24 கரையோரப் பகுதிகள் சுற்றுலாத் தலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வகையில் தற்காலிகமாக இந்த சுற்றுலா தலங்களை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் கொழும்பு, எல்ல, நுவரெலியா, கண்டி மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளை சுற்றுலாப் பயணிகளை கவரும் பகுதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்குரிய நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (4)

# மரண அறிவித்தல்

## திரு. தர்மலிங்கம் தர்மசேகரன்

தோற்றம் 06.07.1945 | மறைவு 22.07.2023



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் மெல்பர்ன், பிரிஸ்பன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மசேகரன் அவர்கள் 22.07.2023 (சனிக்கிழமை) அன்று இறைபதம் எய்தினார். அன்னார் காலம் சென்றவர்களான தர்மலிங்கம், இராணி நாயகம் தம்பதியரின் மகனும் காலம் சென்றவர்களான தனராஜா சிவஞானமணி தம்பதியரின் மருமகனும் காலம்சென்ற ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் லிங்கநாயகம் காலம் சென்றவர்களான தர்மதுரை, தர்மசந்திரன் மற்றும் தர்மகுணலோசனா, தர்மகுணபூசனா, தர்மஜெயசூரியர், காலம் சென்றவர்களான தர்மகுணவதனா, தர்மகுணபவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னத்தம்பி அருளானந்தன், சிவபாலசுந்தரம், சண்முகராஜா, விமலாதேவி மங்களேஸ்வரி, காலம் சென்ற சொர்ணலக்சுமி மற்றும் ரோகினிதேவி காலம் சென்ற தனேஸ்வரி மற்றும் யோகராணி, செல்வராணி, திருக்குமார் சிவராணி, காலம் சென்ற இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலம் சென்ற விமல்ராஜ் மற்றும் நிமல்ராஜ், விக்டர், மதனராஜா மோகனராஜா, மாளவியாஸ்ரீவாணி, மோகனாஸ்ரீவாணி, அனுராகின் தகராஜ் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ரோகன்ராஜ், தேனுகன் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் குமுதினி, அனுஷா, சிவநிதி, விக்னராஜ் யுஷாந்தி, தேனுகா, ஆரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு தகன கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-6951)

347, பலாலி வீதி, ஊரெழு.
077 734 8689: வை.கிரிதரன்(பெறாமகன்)
077 175 8485: த.ரோகன்ராஜ்(பெறாமகன்)

தகவல்
குடும்பத்தினர்.

# பொலிஸ் அதிகாரிகள் போன்று நடித்து கொள்ளை

## 10 பேர் கைது

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்று நடித்து பணம் மற்றும் சொத்துக்களை கொள்ளையிட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொக்குனு விட்ட பிரதேசத்தில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மில்லனிய, கஹதுடுவ, அங்குருவத்தோட்ட, பாதுக்க, கொஸ்கம, இங்கிரிய, கிரிந்தி வெல மற்றும் பண்டாரகம ஆகிய இடங்களில் சந்தேக நபர்கள் இந்த கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் பிரகாரம் கடந்த 18 ஆம் திகதி ஹொரண பொக்குனுவிட பிரதேசத்தில் 10 கிராம் ஹெரோயினுடன் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே ஏனையவர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

# இராசிபலன்

23.07.2023
ஆடி 07, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முற்பகல் 9.21 மணிவரை
உத்தரம் பிற்பகல் 5.59 மணிவரை

சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகுகாலம்-4.32-6.02 மணிவரை
சஷ்டி விரதம்

சந்திராஷ்டமம்-
சதயம்
பூரட்டாதி.

வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.


கடகம்

காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.


துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


மகரம்

வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்,மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள்.


ரிஷபம்

பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள்,கனவுகள் நனவாக கந்தனை வழிபட வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.


விருச்சிகம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்,விரயங்கள் மேலோங்கும் நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.


மிதுனம்

நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.


கன்னி

புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்ப ஒற்றுமை கூடும், பிறர் உதவியுண்டு,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


மீனம்

உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம்,வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

மதம் என்பது கடவுளுக்கும் மனிதனுக்கும் அன்பு செலுத்துவதேயன்றி வேறொன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய உற்சவங்களில்

# உரிய அனுமதி பெற்ற பின்னே யானைகளை பயன்படுத்த முடியும்

### யாழ்.அரச அதிபர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆலய உற்சவங்கள் மற்றும் ஏனைய விழாக்களுக்கு யானைகளைப் பயன்படுத்துதல் தொடர்பில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபால சுந்தரன் விசேட அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆலய உற்சவங்களின் போது வேறு மாவட்டங்களில் இருந்து யானைகள் வரவழைக்கப்பட்டு அவற்றை எந்த விதமான பாதுகாப்பு நடைமுறைகளும் இன்றி ஆலய சடங்குகளிலும் மற்றும் ஊர்வலங்களிலும் ஈடுபடுத்துவதனை காணக்கூடியதாக உள்ளது.

உரிய பாதுகாப்பு நடைமுறைகள் ஏதும் பின்பற்றப்படாமல் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இவ்வாறு யானைகளை பயன்படுத்தவது சட்டவிரோதமானதும் பொதுமக்களுக்கு எதிர்பாராத விதமான ஆபத்துக்களை விளைவிக்க கூடியதாகும்.

வடக்கு மாகாண கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி இவ்வாறு யானைகளை பயன்படுத்துவதற்கான அனுமதி வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் யானைகளை கையாள் வதற்கான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் அதற்கான ஆளணி ஆகியவை பேராதனை கால்நடை வைத்திய பீடத்தில் மட்டுமே உள்ளதுடன் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் தொழில் பரப்பினுள் அவற்றுக்கான ஏற்பாடுகள் ஏதும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறு உரிய அனுமதி பெறப்படாமலும், உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாது யானைகளை உற்சவங்களில் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு ஆலய நிர்வாகத்தினரும் மற்றும் உற்சவங்களை நடத்துவோரை கேட்டுக்கொள்வதாக அறிவித்துள்ளார்.(4-33)

## வெடிபொருட்களுடன் இருவர்

# கெற்பேலியில் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வெடி மருந்துகளுடன் கொடிகாமம் பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுத் துப்பாக்கிக்கு பயன் படுத்தும் வெடிமருந்துகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

# ஓகஸ்ட்டில் யாழ்-கொழும்பு சொகுசு ரயில் சேவை



(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பிற்கு இடையில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் சொகுசு ரயில் ஒன்றை சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளாந்தம் இரவு 10 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்படும் இந்த ரயில், காலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்தை சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் இருந்தும் நாள்தோறும் இரவு 10 மணிக்கு கொழும்பு நோக்கி ரயில் சேவை இடம் பெறும் என்றும் ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த ரயில் சேவைக்கான கட்டணம் 4,000 ரூபாய் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (4)



பால் நிலைச் சமத்துவம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான இரு நாட்களை முழுநேரமாகக் கொண்ட பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலையத்தில் Healthy Lanka நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

(படம்- தேவானந்தன்.யதுபாஸ்கரன்)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துன்னாலை பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி வடக்கு கம்பர் மலை பகுதியைச் சேர்ந்த 43 வயதானவரே ஒரு கிராம் 960 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-33)

## வாய்த்தர்க்கம் முற்றியதில்

# தங்கையின் தலைமுடியை வெட்டி அகற்றிய அக்கா

### பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

குடும்பத்திற்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தனது தலைமுடியினைக் கத்தரித்த சகோதரிக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அளவெட்டி பகுதியில் தனது தங்கச் சங்கிலியை ஏமாற்றிக் களவாடி விட்டதாக தங்கையின் தலைமுடியை அக்கா கத்தரித்துள்ளார்.

இதனையடுத்தே தனது தலைமுடியை கத்தரித்த அக்கா மீது தங்கை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கனடாவில் வசிக்கும் பெண்ணொருவர் அளவெட்டியில் உள்ள தனது தாய் வீட்டுக்கு குடும்பத்தினருடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வந்துள்ளார்.

வீட்டிற்கு வந்தவர், தனது தாலிக்கொடி மற்றும் தங்க சங்கிலி என்பவற்றை தங்கையிடம் பாதுகாப்பாக வைக்குமாறு கொடுத்துள்ளார்.

இந்நிலையில் தான் கொடுத்த நகைகளை தருமாறு தங்கையிடம் கோரிய நிலையில், தங்கை தாலிக் கொடியை மாத்திரமே கையளித்துள்ளார்.

சங்கிலி தொடர்பில் கேட்ட போது, சங்கிலி தரவில்லை தாலிக் கொடி மாத்திரமே தந்ததாக தங்கை கூறியுள்ளார்.

இதனால் அக்கா - தங்கை மத்தியில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு சண்டையாக மாறியுள்ளது. அதன்போது தங்கையின் முடியை அக்கா கத்தரித்துள்ளார்.அதனை அடுத்து, கத்தரிக்கப்பட்ட தனது தலைமுடியுடன், பொலிஸ் நிலையம் சென்ற தங்கை, தனது அக்கா மீது முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# வலி.வடக்கு இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் தொடரும் திருட்டுக்கள்

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பிரதேசங்களில் இராணுவத்தினரால் மீள கையளிக்கப்படவுள்ள பகுதிகளுக்குள் திருடர்கள் ஊடுருவி பொருட்களை திருடிச் செல்வதாக காணி உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வலி. வடக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக கடந்த 33 வருடங்களுக்கு மேலாக உள்ள பிரதேசங்களில் சில பகுதிகளை இராணுவத்தினர் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கும் நோக்குடன், அந்த காணிகளில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

அவ்வாறு இராணுவத்தினர் வெளியேறி உள்ள போதிலும் அவை உயர் பாதுகாப்பு வலயமாகவே தற்போதும் உள்ளது. குறித்த பகுதிகளை மாவட்ட செயலரிடம் உத்தியோகபூர்வமாக தாம் கையளித்த பின்னரே காணி உரிமையாளர் காணிக்குள் பிரவேசிக்க முடியும் என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் தமது காணிக்குள் வெளியாட்கள் சிலர் நடமாடுவது தொடர்பில் அறிந்து காணிக்கு சென்ற போது , உயர் பாதுகாப்பு வலய வேலிக்கு உள்ளே வாகனங்களுடன் நடமாடும் திருடர்கள் காணிக்குள் திருட்டுக்களில் ஈடுபடுவதனை அவதானித்துள்ளனர்.

அது தொடர்பில் , கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கு அறிவித்த போது, குறித்த பகுதிகள் இராணுவ கட்டுப்பாட்டு பகுதி, அப்பகுதிகளை இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னரே தாம் அப்பகுதிக்குள் செல்ல முடியும். அது வரையில் அவை உயர் பாதுகாப்பு வலயமே என தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பில் இராணுவத்தினரிடம் முறையிட தாம் அஞ்சுவதாகவும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வாகனங்களுடன் சென்று பொருட்களை களவாடுகிறார்கள் என்றால் நிச்சயம் அவர்களுக்கு செல்வாக்கு இருக்கும். அது தொடர்பில் இராணுவத்தினரிடம் முறையிட சென்றால் தமக்கு ஆபத்து ஏற்படலாம் என காணி உரிமையாளர்கள் மேலும் தெரிவித்தனர். (4-33)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 399
Viber 076 636 3378



# ஈழத் தமிழினம் மீதான இந்தியாவின் கரிசனை எப்படிப்பட்டது?

மனமுண்டேல் இடமுண்டு என்றொரு சொல்லாடல் உண்டு.

அதாவது ஒரு விடயத்தைச் செயற்படுத்த வேண்டும் என்பதற்குள் அந்த விடயத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனும் மனம் இருக்க வேண்டும்.

அவ்வாறான மனம் இருந்தாலே அச்செயல் செய்து முடிக்கப்படும், வெற்றி அடையும் என்பது அதன் உள்ளார்ந்த அர்த்தமாகிறது.

மேற்குறித்த மனமுண்டேல் இடமுண்டு எனும் சொல்லாடல் ஈழத் தமிழினத்திற்கும் இந்திய தேசத்திற்கும் மிகப் பொருந்தவல்ல விடயமாகும்.

அதாவது இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையீடு இன்றி ஒருநாளும் அரசியல் தீர்வை பெற்று விட முடியாது.



> **தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியாவிற்கிருந்த காழ்ப்புணர்ச்சி ஈழத்தமிழனத்தின் மீதான இலங்கை ஆட்சியாளர்களின் வன்மத்தனத்தை கண்டும் காணாததுமாய் இருந்ததே உண்மை. அது ஈழத்தமிழனம் வன்னிப் பெருநிலப் பரப்பில் மடிந்துபோக காரணமாகவும் அமைந்தது.**

இந்நிலையில் இந்தியா மனம் வைத்தாலே இலங்கையில் ஈழத்தமிழர் தமது உரிமைகளுடன் தமது பூர்வீக நிலங்களில் இலங்கையர்களாய் வாழ முடியும்.

ஆயினும் இந்தியாவின் மனம் வைத்தல் செயற்பாடு தான் இன்றுவரை நடந்ததாய்த் தெரியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியாவிற்கிருந்த காழ்ப்புணர்ச்சி ஈழத்தமிழனத்தின் மீதான இலங்கை ஆட்சியாளர்களின் வன்மத்தனத்தை கண்டும் காணா ததுமாய் இருந்ததே உண்மை. அது ஈழத்தமிழனம் வன்னிப் பெருநிலப் பரப்பில் மடிந்து போக காரணமாகவும் அமை ந்தது.

இலங்கை மீதும் ஈழத்தமிழினத்தின் மீதும் அதீத அக்கறை கொண்டிருந்த இந்தியா எங்கு ஈழத் தமிழினத்தை கைவிட்டது என்பதை நாம் இங்கு கூறித்தான் தெரிய வேண்டியதில்லை.

ஆயினும் இந்தியா ஈழத் தமிழினத்தை கைவிட்டது என்பது மட்டும் நிதர்சனமானது.

இலங்கையின் வரலாற்றில் பல திருத்தச் சட்ட மூலங்கள் அறிமுகப்ப டுத்தப்பட்டிருந்தாலும் இந்திய அரசினால் அறிமுகப்படுத் தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டமூலம் மிக முக்கியம் பெற்று நிற்கிறது.

ஏனெனில் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் ஈழத்தமிழினத்தின் அபிலாசைகளை ஒரளவு திருப்திப்படுத்தும் வகையில் அமைந்ததுடன் இலங்கை வரலாற்றில் இயற்றப்பட்ட சட்ட மூலங்களில் வெளிநாடு ஒன்று தலையிட்டிருந்த ஒரே ஒரு சட்ட மூலம் 13 ஆவது திருத்தச்சட்ட மூலம் என்பது விசேடமான விடயம்.

இதனாலோ என்னவோ இன்று வரை 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தினை பெரும்பான்மை ஆட்சியாளர்களால் எதுவும் செய்துவிட முடியாதிருக்கின்றது.

13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தில் காணி பொலிஸ் அதிகாரங்களை தமிழினத்திற்கு வழங்குவதற்கு மனமின்றிய பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்கு 13 ஆவது திருத்தச்சட்ட மூலம் பெரும் தலையிடியாக அமைந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நிலை இதுவாக இருக்கையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்ததுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பில் இந்தியப் பிரமர் நரேந்திர மோடி 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியதாக செய்திகள் ஊடகங்களில் வெளியாகி இருந்தன.

இதுவரை எத்தனை முறை இந்தியா குறித்த விடயத்தை இலங்கை ஆட்சியாளர்களிடம் தெரிவித்திருக்கும் என்பதை கணக் கிட முடியாது.

இவ்வாறு கூறியது கூறலை இந்திய அரசு மேற்கொண்டிருந்தாலும் அதை மிக இலாவகமாக இலங்கை ஆட்சியளர்கள் கடந்து செல்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

இந்தியாவின் குறித்த இளகல் தன்மைக்கு இலங்கையின் சீனாவுடனான உறவும் காரணமாக அமைந்தாலும் இலங்கை ஆட்சியாளர்களை அதட்டவல்ல நிலைக்கு இந்தியா இன்னமும் துணியவில்லை என்பதுதான் வேதனைக்குரியது.

இலங்கையில் வாழும் சிறுபான்மை தமிழினத்தின் மீது இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனம் கொஞ்சநஞ்சமல்ல.

அதனூடே விளைந்ததே 13 ஆவது திருத்த சட்ட மூலமாயினும் அதை இன்றுவரை நடைமுறைப்படுத்தும் பொறிமுறையை இந்திய அரசு கையாளவில்லை என்பது தான் வேதனை.

13 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்களிடத்தே பெரும் முரண் காணப்படுவதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தனி ஈழத்தின் கோரிக்கை 2009 உடன் தோற்றுப் போனதும் எழுந்த இரண்டு துருவங்களாய் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தையும் சமஸ்டியையும் கூறிவிட முடியும்.

அற்ப சொற்ப சலுகைகள் நிறைந்த 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தைக்கூட தரமறுக்கும் இலங்கை ஆட்சியாளர்கள் சமஷ்டியைத் தருவார்கள் என நினைத்து பகல் கனவு காணும் சில அரசியல் தலைவர்களின் சிற்றறிவை எண்ணி தமிழினம் தலையில் அடிப்பதை விட வேறு எதைச் செய்துவிட முடியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் நரேந்திரமோடியைச் சந்திப்பதற்கு முன்னர் தமிழ் தலைவர்களால் தயாரிக்கப்பட்ட மோடிக்கான கடிதம் கிடைத்திருக்க வேண்டும்.

அவ்வாறு கிடைத்திருக்குமாயின் மோடியின் ரணிலுடனான சந்திப்பில் சிறு மாற்றத்தையேனும் உணர்ந்திருக்க முடியும்.


ஆயினும் மீண்டும் மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி எனும் கதையாய் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துங்கள் என கூறியதை மீண்டும் மீண்டும் இந்தியா கூறுவது தமிழினத்திற்கு சலிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நுழைவாயில் நந்திகள் எங்கே போயின?



வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி ஜனாதிபதி ரணில் இந்தியாவுக்கு போய் பிரதமர் மோடியைச் சந்தித்தவரல்லோ என்ன நடந்தது.

**விதானையார்:-** ரணில் இந்தியாவுக்கு போனதன் நோக்கம் வேற, ரணிலைச் சந்தித்த பிரதமர் மோடியின்ர நோக்கமும் வேற.

இதுக்குள்ள எங்கட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பிரதமர் மோடி வலியுறுத்த வேணும் என்பது எங்கட நோக்கம்...

**மூப்பர்:-** என்ன இருந்தாலும் மணிப்பூரில நடந்த கலவரம் பிரதமர் மோடிக்குப் பெரும் தலையிடியாய்ப் போய்ச்சுது.

அதேநேரம் எதிர்க்கட்சிகளும் பெரும் பேராட்டத்தில ஈடுபட்டிருக்கினம். இந்த நேரத்தில மோடி-ரணில் சந்திப்பு தமிழ் மக்களுக்கு அவ்வளவு சார்பாக நடந்திருக்க வாய்ப்பில்லை.

**பண்டிதர்:-** எங்கட தலைவிதி எப்பவும் அப்படித்தான். எங்களிட்ட ஒரு சரியான இலக்கு இல்லை. தமிழ் மக்கள் வாழ வேணும் எண்ட நிலையை விட, தான்... தான்... வாழ வேணும் எண்ட சிந்தனை மேலெழுந்தால், இலக்குகள் சரியத்தானே செய்யும்.

**சாத்திரியார்:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** இந்தாப் பாருங்க, குருந்தூர்மலையில நடக்க இருந்த பொங்கலை புத்த பிக்குகளும் சிங்கள இணவாதிகளும் பொலிஸாரும் சேர்ந்து தடுத்து நிறுத்திப் போட்டினம். அங்க நின்ற எங்கட ஆட்கள் மிகக் குறைவு.

ஒரு செவ்வியில, வேலன் சுவாமிகள் சொல்லுறார்; நான் மட்டும் தான் அங்க நிண்ட ஒரு துறவி. வேறு ஒருவரும் அங்கு இல்லை எண்டு. ,

அப்படியானால், சைவ சமயத்தில வேறு ஒருவரும் இல்லையா? அவர்களைக் கூட்டிக் கொண்டு போக வேலன் சுவாமி விரும்பவில்லையா? எண்ட கேள்விகளும் எழத்தானே செய்யும். ஆக, ஒவ்வொருவரும் தன்னைத் தான் முதன்மைப்படுத்த நினைத்தால், தமிழும் சைவமும் காப்பாற்றப்பட மாட்டாது.

அவர்களைப் பார்த்தால், அங்க பௌத்த மதத்தைக் காப்பாற்றுறது தான் நோக்கமேயல்லாமல், தனிமனித முன்னிலைப்படுத்தல்கள் எதுவுமில்லை.

ஆனால் எங்களிட்ட தனிமனித முன்னிலைப் படுத்தலுக்காக, தமிழும் சைவமும் காப்பாற்றப்பட வேணும் என்பதை சிலர் கையில எடுத்திருக்கினம். இதாலதான் தமிழ்ப் பற்றாளர்கள் ஒதுங்கிக் கொண்டிட்டினம்.

**சிறாப்பர்:-** பண்டிதர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இந்தாப் பாருங்க தையிட்டியில அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்போது, ஒரு தமிழ் அரசியல் கட்சி மட்டும் தான் அதில முன்னிலைப்படுகுது. இதைப் பார்க்கின்ற வெளிநாட்டு இராஜதந்திரிகள் நிச்சயம் ஒரு கேள்வியைக் கேட்பினம். ஏன் தையிட்டி விகாரைக்கு ஒரு தமிழ்க் கட்சி மட்டும் எதிர்ப்புத் தெரிவிக்குது. ஏனைய தமிழ் மக்கள் தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு இல்லையோ.

அப்படி அவர்களும் எதிர்ப்பு எண்டால், பொங்கு தமிழ் போல, எழுக தமிழ் மாதிரி ஒரு பெரும் பேரணி தையிட்டியை நோக்கிப் போயிருக்க வேண்டாமோ.

ஆக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தைப் பிடித்துக் கொண்டு அரசியல் நடத்துகினம் எண்டு தானே வெளிநாட்டு இராஜதந்திரிகள் நினைப்பினம்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** நாங்கள் குருந்தூர் மலையில போராடுறம். ஆனால் இஞ்ச எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில 37 ஆவது பட்டமளிப்பு விழா நடந்தபோது, நுழைவாயிலில இருந்த இரண்டு நந்திகளும் அகற்றப்பட்டதோட, வழமையாக அங்க வைக்கிற இரண்டு பெரிய நந்திகளும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன.

ஆனால் அதைப்பற்றிக் கேட்கிறதுக்கும் கதைக்கிறதுக்கும் எங்களிட்ட ஆட்கள் இல்லை. நந்தி என்பது எங்கட தமிழ் மன்னர்களின் ஆட்சி காலத்தின்ர இலட்சினை. ஆன்ால் நந்தியை சைவ சமய அடையாளம் எண்டு நினைச்சு அதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இருந்து மெல்ல மெல்ல அகற்றுகினம்.

நான் கேட்கிறன் எதற்காக நந்திகளை நுழைவாயிலில இருந்து அகற்ற வேணும். இது யாரைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டது. தமிழ்த்துறை, இந்து நாகரிகத்துறை, சமஸ்கிருதத் துறை என்பன என்ன செய்து கொண்டிருக்கின்றன.

நந்திகளை அகற்றுவதற்கு அவர்களும் உறுதுணையா? யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாக்களிலெல்லாம் கம்பீரமாக நின்ற நந்திகள் 37 ஆவது பட்டமளிப்பு விழாவின் போது அகற்றப்பட்டது ஏன்?

இதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகம் நிச்சயம் பதில் அளித்தே ஆக வேண்டும்.

அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பட்டமளிப்பு விழாவில் நந்திகள் அகற்றப்பட்டது குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்றுத் துறைப் பேராசிரியருமான பத்மநாதன் அவர்கள் மௌனமாக இருப்பது ஏன்?

இந்த மௌனம் உங்களின் வரலாற்று உரைகளை எங்கணம் பெறுமதியானதாக ஆக்கும். அது எங்கணம் தமிழ் மக்களை ஈர்க்கும்.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் ஆக்ரோசமாகப் பேசியதும் ஆலடி நிசப்தமாகியது.

அந்த நிசப்தம் பல அர்த்தங்களைப் பேசியது. ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் சொத்து. சைவப் பெருவள்ளல் சேர்.பொன்.இராமநாதன் வழங்கிய கொடை.

இதில் நந்தி என்பது எங்கள் தமிழினத்தின் அடையாளம்.

இதை அனைவரும் காப்பாற்ற வேண்டும். இப்போது யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் தமிழ் மாணவர்கள் 55 வீதம் மட்டுமே. இன்னும் சில வருடங்களில தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 50 வீதத்தை விடக் குறைந்து போகும்.

இதற்கு எந்த வகையிலும் சிங்களவர்கள் காரணமே இல்லை. நாங்கள் எங்கள் தாய்மொழி தமிழை முதல் வருடத்தின் கற்கை மொழியாக ஆக்கி, கலைத்திட்டம் தயாரித்திருந்தால் 95 வீதமான மாணவர்கள் தமிழ் மாணவர்களாக இருக்க, மருத்துவம், பொறியியல் ஆகிய இரண்டு துறைகளில் மட்டுமே சிங்கள மாணவர்கள் கற்கின்றதாக நிலைமை இருந்திருக்கும்.


பரவாயில்லை. நாங்களே எங்களை இழக்கத் தயாரான போது அதை யாராலும் தடுக்க முடியாது.

ஆனால் ஒரு கல்விச் சமூகம் முதுகெலும்பு இல்லாமல் நடந்துகொள்ளுமாயின் அதைவிட்ட ஈனமும் பாவமும் வேறெதுவுமாக இருக்க முடியாது.

ஆலடியில் நிலவிய மௌனத்தின் ராகம் காற்றோடு கலக்க, அதன் வீச்சில் ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாலை 5 மணிக்கு கண்விழித்து அந் நாள் முழுவதும் துன்பப்படும் தரம் 5 மாணவர்களை காப்பாற்ற வழி சொல்லுங்கள் வியாசரே?



நாய்க்குட்டிகளை வீதியில் விட்டுச் செல்லும் கல் நெஞ்சம் கொண்ட வர்கள் திருந்து வார்களா?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**அம்மா என்பதன் அர்த்தம் என்ன வியாசரே?**

இந்த உலகில் தாயைப் போல சக்தி எதுவும் இல்லை.தாயின் தியாகங்கள் இவ்வுலகிற்கு ஈடானது என்பதனால் தான் தாயை பொறுமையுள்ள எந்த சுமையையும் தாங்கும் பூமிக்கு ஒப்பிடுகிறார்கள்.

கால் விரலில் கல் அடிக்கும் போது ஏற்படும் வலியிலும் ஆயிரம் மடங்கு அதிகவலியை ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்க தாய் சுமக்கிறாள்.

அப்பேற்பட்ட உன்னத தாயை போற்றுவதற்கும் அவள் தியாகத்தை பாராட்டுவதற்கும் நாள் ஒன்றை தெரிவு செய்து அன்னையர் தினம் கொண்டாடுவது போதாது.

தாயானவள் நாளுக்கு நாள் போற்றப்பட வேண்டியவள்.

எந்த விடயமும் அருகில் இருக்கும் போது தெரியாது.

அது இல்லாத போனபின்னரே அதன் அருமை-பெருமை புரியும். இதில் தாய் மிக முக்கியம் பெற்று நிற்கிறாள்.

**மதுவன் — மீசாலை**

**வீட்டில் தொலைக்காட்சி தொடர் நாடகம் பார்க்கும் பெண்களால் சண்டை வருவதில்லையா வியாசரே?**

என்னது சண்டையா? முரண்டு பிடிக்கும் கணவனை தீர்த்துக் கட்டுவது எப்படி? மாமியாரை பழிவாங்குவது எப்படி? மச்சினியை வீட்டை விட்டு துரத்துவதற்கு என்னென்ன வித்தைகள் செய்ய வேண்டும்?

இப்படிப்பட்ட தொடர்களில் மூழ்கி யிருக்கும் பெண்களிடம் ஆண்களால் எதுவும் பேச முடியுமா சொல்லுங்கள்.

எனக்கெல்லாம் அநேக நாட்களில் தோசை கறுப்பாகத் தான் வரும்.

தொடர் நாடகத்தின் தாக்கம் தோசைக் கல் சரியான பக்கம் வைக்கப்படுவதில்லை.

ஏன் தோசைக் கல்லைக் கூட சரியாக வைக்க மாட்டாயா என்று உறுக்க மனம் வரும்.என்ன செய்வது அப்படி கேட்டால் எனது கதை அவ்வளவு தான்.ஆதலால் கறுப்பாய் இருந்தாலும் தோசை தானே என அதை சாப்பிட்டு விடுவேன்.

உயிர் முக்கியமில்லையா?

**சுந்தரம் — துன்னாலை**

**சரத்வீரசேகரவின் விசமப் பேச்சுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து விட்டதே?**

ஒருமுறை சரத்வீரசேகர தொடர்பில் சரத் பொன்சேகா ஒரு கருத்தை முன்வைத்திருந்தார் அதாவது.

“குண்டுச் சத்தம் கேட்காத இடத்தில் கடமையாற்றிய சரத்வீரசேகர விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் ஏதோ தான் தான் போரில் நின்று அவர்களை வென்றதாக பேசுகிறார் ” என்று.

சரத்வீரசேகரவைப் பற்றி கூறுவதற்கு இதை விட வேறு பொருத்தமான உதாரணம் எதுவுமாக இருக்க முடியாது.

விடுதலைப் புலிகளின் நிழலைக் கூடப் பார்த்திராத பலர் அவர்கள் தொடர்பில் பேசுவதைக் கேட்கும் போது சிரிப்புத்தான் வருகிறது.அந்தச் சிரிப்புக் கதைக்குள் இவரையும் அடக்கிப் பாருங்கள். எல்லாம் சிரிப்புடன் முடிந்துவிடும்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**திகான் — வடமராட்சி**

**அதிகாலை 5 மணிக்கு கண் விழித்து அந் நாள் முழுவதும் துன்பப்படும் தரம் 5 மாணவர்களை காப்பாற்ற வழி சொல்லுங்கள் வியாசரே?**

வேள்விக்குக் கடாய் வளர்ப்பது போல பிஞ்சுப் பாலகர்களை பரீட்சைக்கு தயார்படுத்தும் பாவச் செயலை முதலில் அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

தரம் 5 புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சை மாணவர்களுக்கானது என்பது மருகிப் பெற்றோர்களுக்கானது, அவர்கள் கௌரவத்திற்கானது என்றாகி விட்டது.

இக்கொடுமைத்தனம் நிறுத்தப்பட்டாலே தரம் 5 மாணவர்களின் மன உளைச்சல் தீரும்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை பிள்ளைக்குப் பதில் பெற்றோர்களுக்கு வைத்தால் மிகச் சிறப்பானதாய் இருக்கும்.

அவர்களின் கௌரவத்திற்காக ஏன் பிள்ளைகளை வருத்த வேண்டும். ஆதலால் அடுத்த வருடத்திலிருந்து பிள்ளைக்காக பெற்றோர் பரீட்சை எழுதினால் அது பொருத்தமானதாய் இருக்கும்.

**சுதன் — குப்பிழான்**

**ஆட்சியாளர்கள் தான் எம்மினத்தை ஏமாற்றுகிறார்கள்.இந்தியப் பிரதமரும் ஏமாற்றுவாரா வியாசரே?**

ஈழத் தமிழினம் ஏமாற்றப்பட்டு இன்றைக்கு பல வருடங்கள் கடந்துவிட்டன தம்பி.

ஆனால் இன்றுவரை அவர்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

வன்னி பெருநிலப்பரப்பில் கொன்றொழிக்கப்பட்டது தமிழினம் அல்லாமல் இருந்திருந்தால் என்றைக்கோ அப்போர் நிறைவு பெற்றிருக்கும்.

என்ன செய்வது அங்கு செத்து மடிந்தவர்கள் அப்பாவி ஈழத் தமிழர்கள் அல்லவா?

இந்திய அரசு ஈழத் தமிழினத்தை விடுதலைப் புலிகளாய்ப் பார்த்தது.

விடுதலைப் புலிகள் அழிய வேண்டும் எனின் போர் நடக்க வேண்டும் என விரும்பியது.

முடிவு தமிழினம் அழிக்கப்பட்ட வரலாறு எழுதப்பட்டது.

உலக நாடுகளுக்கு முக்கியமானது தமது நாட்டின் பாதுகாப்பு. அதன் பின்னரே மற்றைய அனைத்தும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

**ஜெகமோகன் — கொக்குவில்**

**நாய்க்குட்டிகளை வீதியில் விட்டுச் செல்லும் கல் நெஞ்சம் கொண்டவர்கள் திருந்துவார்களா?**

வீட்டில் வளர்க்கும் நாய், பூனையை நாம் செல்லப் பிராணிகள் என்று கூறுகின்றோம்.

அவ்வாறு செல்லமாய் வளர்க்கும் அவற்றை வீதியில் விடுவதற்கு சிலருக்கு எப்படித்தான் மனம் வருகிறதோ.

நாம் அலுவலகத்தில் நாள் முழுவதும்களைத்து வேலை செய்துவிட்டு வீடு வரும் போது தனது எஜமான் வருகையை கொண்டாடி அன்பு செலுத்தி வரவேற்கும் அந்த ஜீவன்களை வீதியில் அநாதரவாய் விடுபவர்களுக்கு மனசாட்சி என்பது கொஞ்சமும் இல்லை என்பதே பொருள்.

பால் மணம் மாறாத அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் வீதியில் செல்பவர்கள் பின் கத்தியபடி ஓடி களைத்து இறுதியில் வாகன சில்லு களுக்கு இரையாவது மிகக் கொடும் செயல்.

அந்த கொடுமைகளைச் செய்பவர்களுக்கு நரகம் நிச்சயம்.

**சி.மகாலட்சுமி — கொக்குவில்**

**கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்பதன் அர்த்தம்?**

இது பெரும் மகா தத்துவம். அதாவது நான் கடவுளைக் கண்டேன்.அவனுடன் உரையாடினேன்.அவன் எனக்கு சக்தி வழங்கினான் எனக் கூறுபவர்கள் எவரும் கடவுளைக் காண்பதற்கோ, அவரை உணர்வதற்கோ அருகதை அற்றவர்கள்.

மாறாக கடவுளின் அனுக்கிரகம் பெற்ற மகான்கள் அதுபற்றி பேசாது அமைதியாய் சித்தன் போக்கே சிவன் போக்கு என இருப்பார்கள்.

இப்போதைய நாட்டின் தமிழ் அரசியல் தளத்திற்கும் இந்த தத்துவம் மிகப் பொருத்தமாய் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித
# நூற்றாண்டு விழா சிறப்பு மலர்




## ஆசிச்செய்தி

ஓம் கம் கணபதயே நமஹ
சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப
சாந்தயே
அகஜானன் பத்மார்க்கும் கஜானானம் அஹர்நிசம்
அநேக தந்தம் பக் தானம் ஏகதந்தம் உபாஸ்மஹே

ஓம் பூர் புவ ஸ்வஹா தத்ஸ் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ ஜோனப் ப்ரசோதயாத்

குருர் ப்ரம்மா குருர்விஷ்ணு குருர்தேவோ மஹேஸ்வர ஹ
குருர் ஸாஷாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

மஞ்சவனப்பதி வள்ளிதேவசேனா சமேத முருகப் பெருமானின் திருவருள் துணை நிற்க.

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையானது இக்கிராமத்தைச் சேர்ந்த சைவப் புலவர் ஸ்ரீலஸ்ரீ த.குமாரசாமிப்பிள்ளை அவர்களினால் 1922 இல் ஸ்தாபிக்கப்பட்டு இன்று நூறு ஆண்டுகளைக் கடந்து தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்விழாவினை முன்னின்று கொண்டாடும் பாடசாலை அதிபர். ஆசிரியர்கள். பெற்றோர்கள். நலன்விரும்பிகள். மாணவ. மாணவிகள் அனைவருக்கும் எனது ஆசிகள் உரித்தாகுக.

**சிவஸ்ரீ வை.சுப்பிரமணியக் குருக்கள்,**
**சிவஸ்ரீ சு.சரவணபவக் குருக்கள். (BSc)**



## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை

ஈழத் திருநாட்டில் தமிழர்கள் தமது தலையாய சொத்தாகக் கல்வியைக் கருதினர். ஊர்தோறும் பள்ளித் தலங்களை நிறுவி இளம் சிறார்களை ஆற்றுப்படுத்தினர். அந்த வகையில் கொக்குவில் மேற்கில் நூறு ஆண்டுகளுக்கு முன் உதித்த ஞானபண்டித வித்தியாசாலை பலரை வாழ வைத்தது. சிறந்த ஆற்றலாளர்களை உருவாக்கிய இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன்.

ஆரம்பப் பாடசாலைகள் சீராக அமையாவிட்டால் கல்வியை வளர்த்தெடுக்க முடியாது. ஞானபண்டித வித்தியாசாலை ஆரம்பக்கல்வியைப் பலருக்கு சீராக வழங்கியமை பலரும் அறிந்ததே. இப்பாடசாலை தரம் 01 முதல் தரம் 11 வரை சிறந்த கல்வி வழங்கி இன்றும் வீறுநடை போடுகிறது. சிறந்த அதிபர்கள் இப்பாடசாலையை வளர்த்தெடுத்துள்ளார்கள். பல நல்லாசிரியர்கள் இப்பாடசாலையில் சிறந்த பணியாற்றியுள்ளார்கள். இப்பாடசாலை சைவப் பாரம்பரியத்தோடு சமூகத்தை நெறிப்படுத்தியுள்ளது. நூற்றாண்டு விழாக் காணும் இப்பாடசாலையை கொக்குவில் சமூகம் என்றும் காக்க வேண்டும். யாழ் குடா நாட்டில் பல ஆரம்பப் பாடசாலைகளுக்கு மாணவர் தொகை குறைவாக இருப்பதாகக் கூறி மூடுவிழா நடக்கிறது. இது அதிர்ச்சியைத் தருகிறது. எனவே. இப்பாடசாலைச் சமூகம் என்றும் விழிப்பாக இருக்க வேண்டும். நூற்றாண்டு விழாக் காணும் இப்பாடசாலை சூரிய. சந்திரர் உள்ளவரை நிலைபெற வேண்டுமென துர்க்கையம்பாளைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு.திருமுருகன்,**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை**



## ஆசியுரை

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு - குறள்

எண்ணென்பதும் எழுத்தென்பதும் வாழும் மனிதருக்கு கண் போன்றதாகும் என்பது உலகப் பொதுமறை படைத்த ஐயன் வள்ளுவன் வாக்கு.

ஞானபண்டித வித்தியாசாலை. கொக்குவில் பதியில் தோற்றம் பெற்று இற்றைக்கு நூறாண்டுகளைக் கடந்து கல்விச் சேவையைத் தொடர்ந்து வழங்கி வரும் பெருமை பெற்றுள்ளது. கொக்குவில் பதியில் வாழ்ந்த மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கானோர் வாழ்வில் ஆரம்பக் கல்வியையும் அடிப்படைக் கல்வியையும் வழங்கி அவர்கள் வாழ்வில் ஒளியேற்றிய பெருமை படைத்தது ஞானபண்டித வித்தியாசாலை என்றால் அது மிகையாகாது.

எனது தாத்தனார் ஸ்ரீலஸ்ரீ த. குமாரசுவாமி புலவர் அவர்கள் தனது சிறுபராயத்திலே சைவமும் தமிழும் நலிவுற்று செல்வதையும் கொக்குவில் பதி மக்களுடைய வாழ்க்கையில் இரு கண்களாகப் போற்றப்பட வேண்டிய கல்வி புறக்கணிக்கப்படுவதையும் கண்டு மனம் வெதும்பினார். ஏழ்மையான பொருளாதார நிலைதான் காரணம் என்பதை உணர்ந்து கொண்டார்.

இலவசமாகப் பயிற்றுவிக்கும் ஒரு கல்விக்கூடத்தை ஆரம்பிப்பதன் ஊடாக நல் மாணாக்கர்களையும் நல்ல சமுதாயத்தையும் உருவாக்க வேண்டுமென்று உள்ளத்தில் கங்கணம் பூண்டார். சமூகத்தில் ஆர்வம் கொண்ட நல் உள்ளங்களையும் ஒருங்கு சேர்த்து தனது சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்ததன் விளைவாக 1922 ஆம் ஆண்டு கொக்குவில் பதி ஞானபண்டித வித்தியாசாலை தோற்றம் பெற்றது. பொருளாதார சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்த பாடசாலையைத் தனது சொந்தச் செலவில் நடத்த ஆரம்பித்தார்.

**குருசுவாமி சுரேந்திரன்,**
**குமாரசுவாமி புலவரின் மகன் வழிப் பேரன்.**









## நூற்றாண்டு விழா வாழ்த்து

யாழ்ப்பாண கல்வி வரலாற்றில் ஒரு நூற்றாண்டாக கல்விப் பாரம்பரியங்களை கொக்குவில் பிரதேசத்தில் விதைத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கொக்குவில் பிரதேசத்தில் மக்களின் கல்வியறிவை விருத்தி செய்யும் நோக்குடன் உயர்திரு. த.குமாரசுவாமிப்புலவர் அவர்களால் 22.10.1922 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தொடர்ந்து தனது கல்விப் பணியைச் சிறப்புடன் ஆற்றி வருகின்றது.

இன்று பாடசாலை பௌதிக வளங்களை மேம்படுத்தி மாணவர்களின் கற்றல். கற்பித்தல் செயற்பாடுகளிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னிலை பெற்று மகிழ்ச்சிக்குரிய பாடசாலையாக இயங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது. கிராமத்தின் ஆரோக்கியம் கல்விச்சாலையின் வளர்ச்சியில் தங்கியுள்ளது. நல்ல கல்விச்சாலைகள் உருவாக்கப்படுவது சமூகத்தின் செயற்பாடுகளுக்கு ஆரோக்கியமாக அமையும். நல்ல மாணவர்களை உருவாக்கிச் சிறந்த சமுதாயத்தை அமைத்து வருகின்ற இப்பாடசாலை. மென்மேலும் வளர்ச்சியடைந்து தனது பணியைச் சிறப்புடன் பல்லாண்டு காலம் செயற்பட வாழ்த்துகின்றேன்.

**திரு.பொ.ரவிச்சந்திரன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**



## உபஅதிபரின் வாழ்த்துச் செய்தி

நூற்றாண்டு கால கல்விப் பாரம்பரியத்தில் யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையானது கல்வியுடன் கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களை சமூகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ்வித்தியாலயத்தின் ஆசிரியராக இருந்து வரலாறு தாங்கிய நூற்றாண்டு ஆவணமாக மிளிரப் போகும் மலருக்கு மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வித்தியாசாலை பிரசவித்த பிள்ளைகள் உலகளாவிய ரீதியில் உயர் பதவி வகிக்கும் மாணவர்களாய் திகழ்வது இப்பாடசாலையின் வளர்ச்சியின் படிக்கற்களாகும். இப்பாடசாலையானது கல்வியில் மட்டுமன்றி உள்ளக விளையாட்டுக்களிலும் தேசிய ரீதியில் பங்குபற்றி பாடசாலையின் புகழ் நாமத்தை இலங்கை பூராகவும் பரவச் செய்துள்ளது.

சமகால உலகளாவிய போக்குகளுக்கேற்ப தன்னிடம் வருகின்ற மாணவர்களை உரிய நடத்தைப் பாங்குடன் வளர்த்தெடுத்து. நல்ல சமூக குடிமக்களை உருவாக்கிக் கொடுக்கும் உன்னத பணியினை அன்றுதொட்டு இன்றுவரை சலிக்காமல் செய்து வருகின்றது. எமது வித்தியாசாலையும் நூறு ஆண்டுகள் கடந்து இன்றும் உயிர்த்துடிப்புடன் காணப்படுகின்றது. நூற்றாண்டில் ஜொலிக்கும் எமது பாடசாலையின் புகழ் நாமம் மென்மேலும் ஒலிக்க ஞான வைரவப் பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றேன்.


**திருமதி.மங்களேஸ்வரி சத்தியசீலன்,**
**யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.**



## அதிபரின்

நூற்றாண்டு
யா/ கொக்குவில்
சாலையானது க
டுப் பாரம்பரி
கொடுத்துக் கொ
இவ்வித்தியாசா
வரலாறு தாங்கி
மிளிரப்போகும் மலருக்கு மனப்பூ
தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகி
"ஓர் பாடசாலை திறத்தலானது
மூடுவதற்குச் சமன்" என்ற சான்
ஏழையால் ஓராயிரம் ஏழைகளுக்கு
பணியினைத் தன் கையில் ஏந்தின
த. குமாரசுவாமிப் புலவர். இவர
ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய தாக்
சொல்ல வேண்டும். கிறிஸ்தவ சூ
இருந்த காலமாதலால் ஓர் திண்
ஆரம்பத்தில் இப்பாடசாலை கா
மேனியும் பொழுதொரு வண்ண
வாண்டு தனது நூற்றாண்டில் கால
இவ் வித்தியாசாலை பிரசவித்த
ரீதியில் உயர்பதவி வகிக்கும் பழைய
வாழ்வளித்த கல்வித்தாயின் வள
கொடுப்போம்" திட்டத்தின் மூலமும்
குழுக்களின் மூலமும் கல்வி நம்பிக்
உதவி வருகின்றமை பிரமிக்கத்தக்க
எண்ணங்களை இந்நன்நாளில் உ
டுள்ளேன். வித்தியாசாலையின் எ
எல்லோரும் ஒன்றாய் அழைக்க
கொண்டு எமது பயனுறுதி மிக்க
யாசாலைக்காக அர்ப்பணிப்பதற்
ஆசிரியர்கள். கல்விசாரா ஊழியர்கள்.
நலன்விரும்பிகள். அயலவர்கள் என
வேண்டும் என்பதோடு எமது பா
கனவுகள் என்றோ ஓர் நாள் நன
நூற்றாண்டு விழா இனிதே நிறை
வாழ்த்துக்களைத் தெரிவித்து அகம
"ஞான வைரப் பெருமானின் அருள

**திரு.த.மனோகரன், அதி**
**யா/கொக்குவில் ஸ்ரீ ஞான**



## பல்லாயிரம் ஆண்

1922 ஆம்
சுவாமிப் புலவ
பெற்ற எமது பா
டிலே தனது நூ
கொண்டாடும்
கல்லூரித் தாய
குமாரசுவாமிப்
கிராமத்திற்கு உருவாக்கித் தந்த பெரு
வித்தியாசாலை".
ஆரம்பத்திலே திண்ணைப் பள்
கொட்டில்கள் போல் காட்சி அளித்து
இரு பெரும் கட்டடங்கள் பரிமாண
இன்று பல்துறைசார் போட்டிகளிலு
பெருவிருட்சமாக விளங்கி நிற்கி
மிகையாகாது. ஆகவே. கொக்குவி
இப்பெரும்பேற்றை எல்லோரும் ஒன்
நடைபெற வாழ்த்தி வணங்குகின்

**திரு.வி.ஞானேந்திரன்,**
**ஸ்ரீ ஞானபண்டித வித்திய**

## நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துவோர்

கண்ணன் புத்தகக் கடை
ஸ்ரீதிராச வீதி, கொக்குவில் மேற்கு.
077 223 8475

யாழ்ரன் மல்ரி சென்ரர்
யாழ்ப்பாணம்.
077 724 6461

வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்
யாழ்ப்பாணம்.
021 222 3313

கரன் வோச்
யாழ்ப்பாணம்.
021 222 6607, 070 904 3633

Dealers in T.V Radio, Refrigerator, Watch&etc..
CITY ELECTRONICS
No.91, Kasthuriyar Road Jaffna.
021 222 2917

PURANE JEWELLERS
No.46, Kasthuriyar Road, Jaffna.
021 222 3121

மகாநதி ஜுவல்லறி
யாழ்ப்பாணம்.
077 581 2025

செல்வி நகை அகம்
021 222 9441

ஸ்ரீ குகன் பான்சி
077 511 6663

YK PLAZA
No.39, Stanley Road Jaffna.
021 222 3530
070 304 3636

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த வித்தியாசாலை
# ர் - 1922-2022




## பரின் உள்ளத்திலிருந்து

ற்றாண்டு கால கல்விப் பாரம்பரியத்தில்
ாக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியா
பானது கல்வியுடன் கலாசார பண்பாட்
ாரம்பரியங்களைச் சமூகத்திற்கு
துக் கொண்டிருக்கும் இவ்வேளையில்
ந்தியாசாலையில் அதிபராக இருந்து
ு தாங்கிய நூற்றாண்டு ஆவணமாக
மனப்பூர்வமான வாழ்த்துக்களைத்
யடைகின்றேன்.
லானது ஆயிரம் சிறைச்சாலைகளை
சான்றோர் வாக்கிற்கிணங்க ஓர்
களுக்கு கல்வி வழங்கும் உன்னத
ஏந்தினார் சைவப்புலவர் உயர்திரு.
. இவரது இம்முயற்சிக்கு ஸ்ரீலஸ்ரீ
ய தாக்கமும் ஓர் காரணம் என்றே
தவ சூழலின் ஆதிக்கம் அதிகமாக
திண்ணைப் பள்ளிக்கூடம் போல்
லை காட்சியளித்தாலும் நாளொரு
ண்ண முமாக வளர்ச்சியுற்று இவ்
ல் காலடியைப் பதிக்கின்றது.
ிரசவித்த பிள்ளைகள் உலகளாவிய
பழைய மாணவர்களாய் திகழ்வதும்
ன் வளர்ச்சிக்காய் "கல்விக்கு கரம்
மூலமும் பௌதிக வள மேம்பாட்டுக்
நம்பிக்கை நிதியத்தின் மூலமாகவும்
க்கத்தக்கது. எனது உள்ளத்தில் எழும்
ளில் உங்களோடு பகிர்ந்து கொண்
யின் எதிர்கால விருத்திக்காய் நாம்
ழைக்க கரங்களை இறுகப் பற்றிக்
மிக்க செயற்பாடுகளை எமது வித்தி
ரிப்பதற்கு இந்நன்நாளில் அதிபர்.
ியர்கள். பழைய மாணவ சங்கத்தினர்.
கள் என அனைவரும் ஒன்றிணைய
மது பாடசாலைச் சமூகம் காணும்
ள் நனவாகும் என மனதில் பதித்து
நிறைவேற எனது மனப்பூர்வமான
ு அகமகிழ்வடைகின்றேன்.
ர் அருளால் ஞான பண்டித ஓங்குக!"

**ன், அதிபர்,**
**ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.**

## ரம் ஆண்டு நீடுழி வாழ வாழ்த்துகின்றேன்

22 ஆம் ஆண்டு உயர்திரு குமார
ப் புலவர் அவர்களால் உருவாக்கப்
எமது பாடசாலை 2022 ஆம் ஆண்
தனது நூற்றாண்டு வைபவத்தைக்
ண்டாடும் இவ்வேளையிலே இக்
ரித் தாயின் ஸ்தாபகரான உயர்திரு
சுவாமிப் புலவர் அவர்கள் எங்கள்
ந்த பெரும் பொக்கிசம் "ஞானபண்டித

னப் பள்ளிக்கூடமாக இருந்து பின்னர்
அளித்து தனது வளர்ச்சிப் பாதையிலே
ரிமாணம்" பெற்ற எமது பாடசாலை.
டிகளிலும் சரி கல்வி வளர்ச்சியிலும்
நிற்கின்றது என்று கூறினால் அது
ாக்குவில் கிராமத்துக்குக் கிடைத்த
ரும் ஒன்றாகக் கூடி இவ்விழா சிறப்புற
ஙகுகின்றேன்.

**துரின், செயலாளர்,**
**வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்.**



## பொருளாளரின் பேனாவின் வழியே...

வடமாகாணத்திலே "யாழ் பாடி"யின் புகழாரம் பெற்ற யாழ்ப்பாணத்தில் நூற்றாண்டு விழாவினைக் கண்ட பல்வேறுபட்ட பாடசாலைகளில் ஒன்றான யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் என்ற ரீதியில் எமது பாடசாலையின் மீள் எழுச்சியையும் எமக்கு வேண்டிய வளங்களையும் தேவைப்பாடுகளையும் பற்றி சற்றே திரும்பிப் பார்க்க வேண்டிய தருணத்தில் நிற்கின்றேன்.

எமது பாடசாலையின் பிரதான நோக்கமாக மாணவர் சேர்வினை அதிகரித்து நாட்டிற்கும் வீட்டிற்கும் பொருத்தமான அறிவு. திறன் மனப்பாங்கினைக் கொண்ட மாணவர் சமுதாயத்தினை உருவாக்கப் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவானது என்றும் பாடசாலைக்குக் கிடைக்கும் என்பதுடன் எமது பழைய மாணவர் சங்கமானது பாடசாலைக்கென இருமாடிக் கட்டடமும் பாடசாலைக்கென்று ஒரு விளையாட்டு மைதானமும் அமைக்கத் தன்னால் இயன்ற சேவைகளையும் நிதியீட்டல்களையும் புலம்பெயர் தாயக பழைய மாணவர்களிடம் கோரி அதற்கான முதற்கட்ட மாணவர்கள் தேவைகள் பல தற்சமயம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள் பல காணப்படுகின்றன.

அதாவது எமது பாடசாலைக்காக நிழற்பிரதி இயந்திரம் CD Player அன்பளிப்பு. பாதுகாப்பான குடிநீர்வசதி. போசாக்குணவு வழங்கல். திறன் வகுப்பறை. சரஸ்வதி சிலை. நிறுவுநர் சிலை. வள்ளுவர் சிலை. ஆரம்பப்பிரிவு வகுப்பறைத் திருத்தம் மற்றும் பாடசாலை நுழைவாயில் என்பன திறம்பட நிறைவேற்றியுள்ள இத்தருணத்திலே மாணவர்களின் நலன் கருதிப் பாடசாலை மாணவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான கற்றல் வசதிகளை ஏற்படுத்தவும் பாடசாலையின் பௌதிக வள பராமரிப்பிற்காகவும் மாதாந்தம் பாடசாலைக்கு ஏற்படுகின்ற நானாவித செலவிற்காகவும் குறிப்பிட்ட தொகையினை வழங்க வேண்டியிருப்பதனால் அதற்கான ஒரு செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துமாறு பழைய மாணவர்களிடம் ஒரு வேண்டுகோளினை விடுத்து எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவிற்காக வாழ்த்துக்களையும் வழங்கி நிற்கின்றேன்.

**திரு.நீ.கிருபாகரன்,**
**பொருளாளர், பழைய மாணவர் சங்கம்.**



## வாழ்த்துச் செய்தி

கொக்குவில் மேற்கிலே சைவமும் தமிழும் தழைத்தோங்க என வந்துதித்த பெருந்தகையாம் உயர்திரு குமாரசுவாமிப் புலவர் அவர்களினால் 1922 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பதினெட்டாம் திகதி உருவாக்கப்பட்டதுதான் எங்கள் பாடசாலை. இப் பாடசாலையின் வரலாற்றிலே பல கல்விமான்களை உருவாக்கி கொக்குவில் பதிக்குப் பெருமை சேர்த்த எமது பாடசாலை ஆரம்ப காலத்தில் "குமார் பாடசாலை" என அழைக்கப் பெற்றாலும் பின்னரான காலப்பகுதியிலே ஞானபண்டித வித்தியாசாலை எனப் பரிணாமம் பெற்று கல்வி. விளையாட்டு எனப்" பல துறைகளிலும் தனக்கென உயர்வான இடத்தை நோக்கி நகர்ந்தது மட்டுமன்றி குமாரசுவாமிப் புலவர் அவர்களின் எண்ணங்களை. சைவமும் தமிழ் மொழியும் என்ற இரு கண்களும் மற்றவர்களை எமது பாடசாலையை நோக்கி நகர வைத்தன.

அந்தவகையிலே நூற்றாண்டு ஞாபகார்த்தமாக அமைக்கப்பட இருக்கின்ற கட்டடத்திற்கான பங்களிப்பு வழங்கியவர்களுக்கு இவ்வேளை நன்றி கூறுவதுடன் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வரும் ஞானபண்டித வித்தியாசாலை பழைய மாணவர்களாகிய நாங்கள் எங்கள் பாடசாலை இன்னும் பல துறைகளிலும் வளர்ச்சி கண்டு பல்லாயிரமாம் ஆண்டு வளர்ந்திட வாழ்த்துகின்றோம்.

[illegible]

(சி-6952)



## நூற்றாண்டு விழா வாழ்த்து

எமது கொக்குவில் மேற்கு கிராமத்தின் மிகப்பெரும் அடையாளமாக விளங்குவது ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை ஆகும். குமாரசுவாமிப் புலவர் ஐயா அவர்களின் முயற்சியில் ஒரு திண்ணைப் பள்ளியாக 1922 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று நூற்றாண்டு கண்டு மேலோங்குவது எமது கிராமத்தின் பாக்கியம். பள்ளியின் பக்கமுள்ள பனையடர்ந்த வளவுகள் மாறின. குடிசைகள் மறைந்து மாடிவீடுகள் ஆயின. ஓலை வேய்ந்த கொட்டகையாக இருந்த பள்ளிக்கூடம் இன்று மதில் சூழ்ந்து பாதுகாப்பான பாடசாலையாகியது. அங்கு பயின்றவர் நற்குடிகளாகினர்.

தொலைநோக்குடன் அன்று ஆரம்பமானது இன்றுவரை அனைத்து கிராம மக்களையும் இணைக்குமொரு பாலமென. எழுத்தறிவிக்கும் ஆலயமென உயர்ந்து நிற்கின்றது. ஒவ்வொரு தடவையும் பாடசாலையைக் கடந்து போகையில் இனிய நினைவுகள் நெஞ்சை நிறைக்கும். அர்ப்பணிப்புடன் போதித்த என் ஆசிரியர்கள். கூடி விளையாடிக் களித்த. போட்டி போட்டுப் படித்த என் சகவகுப்புத் தோழர்கள் நினைவிலெழுவர்.

**திரு.வே.கருணாமூர்த்தி,**
**செயலாளர், புலம்பெயர் பழைய மாணவர் சங்கம்.**



## வாழ்த்துச் செய்தி

யாழ்/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் நூற்றாணடு விழாவை 23 ஆம் திகதி ஆடி மாதம் 2023 ஆண்டு கொண்டாடுவதை இட்டு உளமாரப் பேருவகை கொண்டு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டுமென. வேண்டிநின்ற சைவப்புலவரும் சமூக அறிவாற்றலைப் பெருக்குவதற்கு அறப்பணி ஆற்றியவரும் ஏழைகளும் கல்வி கற்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட பரோபகாரரும் ஆகிய உயர்திரு.த. குமாரசுவாமிப்புலவர் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை 18 ஆம் திகதி ஐப்பசி மாதம் 1922 ஆம் ஆணடு தோற்றுவித்தார் "சைவப்புலவர்".உலகில் உள்ள நல்லன எல்லாம்!. தகுதியாயின எல்லாம்!. புண்ணிய மெல்லாம்!. ஞானமெல்லாம்! "அறம்".

எச்செயல் யாவராலும் பாராட்டப் பெறுகின்றதோ அது அறமாகும் என்கிறது சான்றோர் வாக்கு. இதன் வித்தகத்தை நுட்பமாக அறிந்துணர்ந்து. செயல் வழி கண்ட "சைவப்புலவர்." "மனமொழி செயலின் செயலின் பண்புயர இனமொழி சமயம் உயர்கலைகள் கன நூலறிவு கனிது ஓங்க தினமும் நின்னைச் சேவிப்போம்" என்கிறது "வித்தியாலயக்கீதம்".

இதில். மனமொழி மெய்களின் எண்ணம் - சொல் - செயலின் தூய்மையே "அறம்" என்பதனையும் "பண்புயர தமிழும் சைவமும். இலக்கிய. இலக்கணப் பயன்பாடுகளைத் தெளிவாகக் கற்றுக் கொள்" என மேற்கோள்காட்டிய "வளர்கலைக்கூடம் வாழியவே" என்றார் "சைவப்புலவர்". மேலும். யாழ் / கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகளை திரு. தங்கவேலு மனோகரன் (வித்தியாலய முதல்வர்). உபஅதிபர் திருமதி.மங்களேஸ்வரி சத்தியசீலன். பகுதித் தலைவர்கள். ஆசிரியர்கள். மாணவர்கள். பழைய மாணவர்கள். பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள். பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் முனைப்பாக செய்து வருவதையிட்டு மனமகிழ்வடைகிறேன். ஞானபண்டித கலைக்கூடம் ஞானம். வாய்மை. நல்லுரைகளைப் போதிக்கும் கலைக்கூடம் தழைத்தோங்கி வளர்ந்திட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வளர்க கலைக்கூடம் வாழியவே!

இந்த நூற்றாண்டு விழா மங்களகரமாய் நடந்தேற வேண்டுமென எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானின் திருவருளை வேண்டிக் கொண்டு நிறைவு செய்கிறேன்.

**திரு.தே.நடனகுமார்,**
**அவுஸ்திரேலியா.**



## மனநிறைவுடன் வாழ்த்தி வணங்குகிறேன்

யா / கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் அரை நூற்றாண்டு கால வரலாற்றை அறிந்தவன் என்ற வகையிலே எமது கல்வித்தாயின் நூற்றாண்டு பூர்த்தி விழா மலரிலே வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மனநிறைவுடன் பெருமகிழ்வடைகின்றேன்.

உயர்திரு குமாரசுவாமிப் புலவர் அவர்களினால் 1922 ஆம் ஆண்டு உருவாக்கப் பெற்ற இப்பாடசாலை ஆரம்ப காலத்தில் "குமார் பள்ளிக்கூடம்" என்று அழைக்கப் பெற்றது. பின்னர் அரசாங்கத்தால் கையாளப்படுத்தப்பட்ட பின்னர் ஞானபண்டித வித்தியாசாலை என பரிமாணம் பெற்று இன்று எமது கிராமத்திலே பல்துறைசார் வளர்ச்சியுடன் எமது பாடசாலை வளர்ந்து நிற்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

1956 ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய நீதிராசா அவர்களும் அவர்களின் குடும்பத்தினரின் உதவியின் மூலமாக எங்கள் பாடசாலைக்கு மேற்குப் பக்கமாக உள்ள மண்டபம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் எங்கள் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை விரிவுபடுத்த அக்கட்டடம் பெரும் உதவியாக இருந்தது என்பதனைக் கூறிக் கொள்வதோடு இன்றைய கல்விச் செயற்பாட்டுக்கு ஏற்ற வகையில் எமது பாடசாலைக்கு இரு மாடிக் கட்டடமொன்றை அமைத்து இந்த நூற்றாண்டு காலப்பகுதியிலே எங்கள் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவச் செல்வங்களும் சகல துறைகளிலும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த எல்லோரும் ஒற்றுமையாக இந்த நூற்றாண்டு காலப்பகுதியிலே இரு மாடிக் கட்டடம் ஒன்றை அமைக்க முன்வர வேண்டுமென்று கூறி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திரு.கு.நடேசமூர்த்தி,**
**பழைய மாணவன்.**



## வாழ்த்தி வணங்குகிறேன்

யா / கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையிலே ஆரம்பக்கல்வி முதல் கல்வி பொது சாதாரணதரம் வரை கல்வி கற்ற எனது பாடசாலையிலே 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை ஆசிரியராகக் கடமை புரிந்து இன்று எமது பாடசாலை நூற்றாண்டு காணும் இவ்வேளையில் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

எமது பாடசாலையில் நான் கல்வி கற்ற காலப் பகுதியிலே பதினேழு வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய அமரர் தர்மலிங்கம் அவர்கள் இப்பாடசாலையிலே கிழக்குப் பக்கமாக இரு மாடிக் கட்டடம் ஒன்று அமைய வேண்டுமென்று பல முயற்சிகள் எடுத்த வேளையிலே துரதிஸ்டவசமாக அவர் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அவர் இப்பாடசாலைக்குப் பல வழிகளிலே பல முயற்சிகள் மூலமாக மேற்குப் பக்கமாக உள்ள மண்டபத்தைக் கட்டி பாடசாலையின் கல்விச் செயற்பாட்டுக்கு பெரும்பங்காற்றியவர் என்ற வகையிலே அன்னாரின் இரு மாடிக் கட்டடக் கனவு நனவாக இன்றைய இந்த நூற்றாண்டு விழாவிலே எல்லோரும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து எங்கள் கல்லூரித்தாய் இன்னும் பல்லாயிரமாம் ஆண்டு வளர்ந்திட வாழ்த்தி வணங்குகின்றேன்.

**செல்வி. மாலதி சிவராசா,**
**உறுப்பினர், நம்பிக்கை நிதியம், பழைய மாணவர் சங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழுமே!

கண்ணீர்ப் புகைக் குண்டு
கருத்தறியார் கையில் அது
உடுத்தெறியா எங்கு போகும்?
சொல்லுக்குச் சொல் ஓர்
பொருள் கூறி வாழ்வோரும்
அருள் பெற்றா கவி கூறுவர்

கொஞ்சு தமிழ் விஞ்சி எழும்
சிந்து நடை கொண்ட தமிழ்
வந்து கலையோடு வாழும்
சிந்து கவிச் செந்தமிழின்
சொந்தம் என்னும் சந்தமது
செந்தமிழின் பந்தமென முந்தும்

வந்த பகைதனை வீழ்த்தி
சிந்தை நிறைந்தே எழுந்தால்
சொந்தம் என்னும் வாகை வரும்
சந்தி பகல் எதுவெனினும்
சொந்தம் என வந்து விடின்
சிந்தையது நிறைந்து கெஞ்சும்


இம்மைக்கும் மறுமைக்கும்
வழி அறியா மனிதர்க்கும்
புவி வாழ்வு சிந்திக்குமோ
கவி கூறும் வழிமுறையில்
மதி தன்னை செயற்படுத்தும்
நிதி போலும் தமிழ் வாழுமே

வளவை வளவன்.

# மதம்

முரணும் மோதலும் இல்லா
அறம் போற்றும்
அன்பு சமுதாயம்
உருப் பெற்றிட
பிறந்ததே மதம்
அகிலத்தின்
ஆயுதப் போர்களை விட
மண்ணில் இரத்தாறு
ஓடுவது ...
மத முரண்பாட்டால்
அன்பினை மனித
இதயங்களில்
விதைத்திடப் பிறந்ததே
மதம்.

தமிழினியன்.



# சாரதியே தூங்காதே

கண் இமைக்கும் நேரத்தில் ஓர் கணப் பொழுதில்
பேரொலி – அங்கே சிக்கி சிதலமாய்க் கிடக்குது
மரண ஓலங்களும் வேதனைக் குரல்களும்

ஏதேதோ நினைவுகளுடனும் கனவுகளுடனும்
பயணமுறும் வேளையிலே நடந்ததுவே
விபரீதம்

ஓட்டுநரின் கவனயீனத்திலும் முந்தி விட
வேணும் என்னும் போட்டி நினைப்பிலும்
நித்திரைத் தூக்கத்திலும் மது போதையிலும்
ஏற்பட்டதுவோ விபரீதம் பார்

நாள்தோறும் கவனத்துடன் இருந்திடினும்
ஏற்படும் இந்த பாழாய்ப் போன வீதிவிபத்துக்கள்
சாரதி அனுமதிப்பத்திரம் இருந்தென்ன
விட்டென்ன அது இருந்தாலும் ஏற்படாதா
வீதிவிபத்து

அபரிமித வேகத்திலும் மது போதையிலும்
ஒரு கையில் ஸ்ரியறிங்கும் மறுகையில்
செல்போனுமாய் ஓட்டும் இந்தச் சாரதிக்கே
வருமிந்தப் பேரிடி அறியாயோ மனிதா

சிங்கப்பூரில் கடும் சட்டம் அங்கு தவறிழைக்கும்
சாரதிக்கு–இங்கும் அது வந்துவிட்டால்
நாடு முன்னேறும் தண்டனை வரியால்–
வீதிவிபத்துக்களும் நின்றிடும் நம் தீவிலும்

சி.சுரேசன், பத்தமேனி.



# மௌனத்தின் தேடல்- 678



# நசுக்கப்படுவது

உலகில் எங்கும் எதிலும்
நசுக்கப்படுவது
சிறுபான்மை இனம் தான்

பி.மதுஷ்சன், தையிட்டி.

# மௌனத்தின் தேடல்- 679



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

# தூக்கமும் துக்கமும்

விதிக்கு விதிவிலக்காகித் தொடரும்
விரும்பத்தகாத வீதிவிபத்துகள்
உலகை நிலைகுலைய வைக்கும்
உபாதை தரும் போதைப்பாவனையின்
வகிபாகம் ஏறுமுகமாவதும்
சகிப்புத் தன்மைக்கும் உயிர் இருக்கும்-சவால்
காலதாமதங்களை சரிசெய்ய
சாலச் சிறந்த வழி இதுவென்று
வேக மிதியை அழுத்திப் பதிப்பது
சோகத்தை வாரித் தரும் செயலாகும்
வேகம் தன்னுடன் தன்னைச் சார்ந்தோரையும்
கெடுக்கும் என்பதும் முழு உண்மையே

க. நாகராசா,
நுணாவில்.

# எது செய்தனை

கொடூர விபத்துக்களும்
கோரச் சாவுகளும்
நிறைந்த இம்மண்ணில்
யுத்தத்தை முடித்ததாய்
மார்தட்டும் அதிகாரத்தினர்
அகாலமாய் மனித உயிர்கள்
பலி கொள்ளப்படுவதை தடுத்திட
என்னதான் செய்தன

ி.இ.அன்புதுரை,
சம்மட்டிபோலை, மானிப்பாய்.

# சாரத்தியம்

வீதியில் செல்வோர் பதறியடிக்க-அவ்
வாகனத்தில் பயணிப்போர் பயத்தால் நடுங்க
நீயா நானா பந்தயம் பிடித்து சாகச
வித்தை காட்டும் சாரத்தியத்தால்
நிலை தடுமாறி வீதியால் செல்லும்
வாகனமும் ஒன்றுடன் ஒன்று
முட்டி மோதி அக்குவேறு, ஆணி வேறாய்
கழண்ட நிலையில் நடுத்தெரு தன்னில்

சி. மகாலட்சுமி, கொக்குவில்.

# அழகி

வட்ட நிலா முக அழகி
ஐவிர மீன் கண்ணழகி
முத்துமுத்துப் பல் அழகி
கன்னக்குழி அழகி
கள்ளமில்லா சிரிப்பழகி
மழலை மொழி அழகி
தாயின் கருவில் வளர்ந்தழகி
தந்தையின் உள்ளம் நிறைந்தழகி
புதிய உறவாய் வந்த அழகி
கடவுள் தந்த கொடை அழகி

கும்பவாழியான், உடுப்பிட்டி.

# சமர்ப்பணம்

இலஞ்சம் கொடுத்து
வாகன ஓட்டுநர் உரிமம்
வாங்குவோருக்கு
இப்படம் சமர்ப்பணம்

பிரமன், கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னக்குழி...
## செயற்கையாக உருவாக்குவது சரியா?

“கன்னக்குழி நடுவே சிக்கிக் கொண்டேன் அழகே... நெற்றி முடி வழியே தப்பி வந்தேன் வெளியே...” என்ற 'ரன்' திரைப்படப் பாடலைப் போல் கன்னக்குழி உள்ள பெண்களை வர்ணித்துப் பல பாடல்கள், கவிதைகள் உள்ளன. “அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள், அவள் கன்னத்தில் குழி விழுந்தது... நான் அவளைப் பார்த்துச் சிரித்தேன்... என் வாழ்க்கையே குழியில் விழுந்தது” போன்ற மீம்ஸ்களும் உண்டு.

கன்னத்தில் குழி என்றாலே பெண்கள்தான் நினைவுக்கு வருகிறார்கள். ஆனால், ஆண்களுக்கும் கன்னக்குழி விழுவதுண்டு. என்றாலும் பெண்களுக்கு விழும் கன்னக்குழி அவர்களின் அழகை அதிகரித்துக் காட்டுகிறது. சமீபத்தில் வெளியான “போர்த்தொழில்” திரைப்படத்தில்கூட கன்னக்குழி முக்கிய இடம்பெற்றிருக்கும்.

கன்னக்குழியில் இத்தனை விடயங்களா? கன்னத்தில் குழி விழுவதற்கு என்ன காரணம்? சென்னையைச் சேர்ந்த வாய் மற்றும் முக அறுவை சிகிச்சை மருத்துவர் எம்.வீரபாகுவிடம் பேசினோம்.

“கன்னத்தில் குழி விழுவது முழுக்க முழுக்க மரபணு சார்ந்தது. அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி என உங்கள் பரம்பரையில் யாருக்கேனும் கன்னக்குழி இருந்தால் உங்களுக்கும் கன்னக்குழி விழுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. நம் முகத்தில் நாம் சிரிப்பதற்காக பல தசைநார்கள் உள்ளன. அதாவது ஸைகோ மேட்டிக்கஸ் மேஜர், ஸைகோமேட்டிக்கஸ் மைனர் போன்ற தசைநார்கள் உள்ளன.

அதில் ஸைகோமேட்டிக்கஸ் மேஜரில் உள்ள சிறிய குறைபாட்டின் காரணமாகத்தான் கன்னக்குழி விழுகிறது. சில நேரங்களில் குழந்தைகளுக்கு முகத்தில் அதிகமாக ஏற்படும். கொழுப்பினாலும் கன்னக்குழி இருப்பது போல் தோன்றும். ஆனால், குழந்தை வளரவளர கன்னத்தில் உள்ள கொழுப்பு குறைந்து கன்னக்குழியும் மறைந்து விடும். பெற்றோர்களுக்குக் கன்னக்குழி இருந்தால் குழந்தைகளுக்கும் கன்னக்குழி இருப்பதற்கு வாய்ப்பு புள்ளதே தவிர எல்லாக் குழந்தைகளுக்கும் அப்படி வரும் என்று சொல்லிவிட முடியாது.

சிலர் தங்களை அழகாகக் காட்டிக் கொள்ள நினைத்து 'டிம்பிள் பிளாஸ்டி' அறுவை சிகிச்சை செய்து கொண்டு செயற்கையாகக் கன்னக் குழியை வரவழைத்துக் கொள்கின்றனர். இது பாதுகாப்பான அறுவை சிகிச்சைதான். ஆனால் எந்த அறுவை சிகிச்சையிலும் சிக்கல் வர வாய்ப்புகள் உண்டு. நிபுணத்துவம் பெற்ற மருத்துவரிடம் பாதுகாப்பாகச் செய்யப்படும் பட்சத்தில் சிக்கல்கள் இருக்காது. சிலருக்கு இந்த அறுவை சிகிச்சைக்குப் பின்பு, ரத்தக் கட்டிகள், கன்னத்தில் வீக்கம், தொற்றுகள் ஏற்படலாம். அறுவை சிகிச்சைக்குத் தயாராகிறவர்கள் இவற்றுக்கும் தயாராக இருக்க வேண்டும்.

கன்னக்குழி என்பது வசீகரத் தோற்றத்தைக் கொடுப்பதால் பலரும் செயற்கையாகக் கன்னக்குழி ஏற்படுத்தும் அறுவை சிகிச்சையை மேற்கொள்கின்றனர். அமெரிக்கா, வடகொரியா போன்ற நாடுகளில் இந்தச் சிகிச்சையைச் செய்து கொள்வதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்





வாழ்க்கையில் அனைத்து வாய்ப்பு வசதிகளையும் பெற வேண்டும் என நினைப்பவர்கள் நிச்சயம் நிதித் திட்டமிடலை (Financial Planning) பின்பற்ற வேண்டும். இது பணத்தை வெறுமனே சேமிப்பது அல்ல. அதை எப்படிப் பாதுகாக்கலாம், எப்படி முதலீடு செய்யலாம், எப்படிப் பெருக்கலாம் உள்ளிட்ட பல விடயங்கள் அடங்கியது. இதில் முக்கியமான ஐந்து நிலைகள் பற்றி இங்கே விரிவாகப் பார்ப்போம்.

**1. பாதுகாப்பு ஏற்பாடுகள்**

நிதித் திட்டமிடலில் முதல் முக்கிய நிலை பாதுகாப்பு ஏற்பாடுகள். இது மூன்று பிரிவாக வரும். ஒன்று - அவசரக் கால நிதி, இரண்டு - ஆயுள் காப்பீடு, மூன்று - மருத்துவக் காப்பீடு.

குடும்ப உறுப்பினர்கள் யாருக்காவது திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டால், வேலை இழப்பு ஏற்பட்டால், எதிர்பாராத அவசரச் செலவு ஏற்பட்டால் சுலபமாகச் சமாளிக்க குடும்பத்தின் மாத சராசரி செலவைப் போல் 3 - 6 மாதத் தொகையை அவசர கால நிதியாக ஏ.டி.எம் வசதி உள்ள வங்கி சேமிப்பு வைக்க வேண்டும். இந்தப் பணத்தை அவசரத் தேவைக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும். அது செலவானதும் மீண்டும் விரைந்து சேர்த்து வைக்க வேண்டும்.

**2. தற்போதைய நிதி நிலை ஆய்வு**

ஒருவரின் தற்போதைய நிதி நிலையை ஆய்வு செய்ய சொத்துகள், பணம், முதலீடுகள் உள்ளிட்ட செல்வம் (Wealth) எவ்வளவு இருக்கிறது எனக் கணக்கிட வேண்டும். இதேபோல் வீட்டுக் கடன், தனிநபர் கடன், கிரெடிட் கார்டு கடன் எவ்வளவு இருக்கிறது எனப் பட்டியலிட வேண்டும். மொத்தச் செல்வத்திலிருந்து மொத்தக் கடன்களைக் கழிக்க நிகர செல்வம் கிடைக்கும். இது பாசிட்டிவ் ஆக இருந்தால் நல்லது.

**3. கடன்களை அடைத்தல்**

நிகர செல்வத்தைக் கணக்கிட்டு, அதில் அதிக வட்டியிலான தனிநபர் கடன்கள் கிரெடிட் கார்டு கடன்கள் இருந்தால் விரைந்து அடைக்கத் திட்டமிட வேண்டும். அதிக வட்டியிலான கடன்களை வைத்துக் கொண்டு முதலீடு செய்வது புத்திசாலித்தனம் அல்ல.

**4. நிதி இலக்குகள் நிர்ணயம்**

அதிக வட்டியிலான கடன்களைக் கட்டி முடித்த பிறகு முக்கிய நிதி இலக்குகளுக்கான (Financial Goals) முதலீட்டை ஆரம்பிக்க வேண்டும். சொந்த வீடு வாங்குவது அல்லது வீட்டுக் கடன் மூலம்

# உங்கள் பணம் பெருகணுமா?

சொந்த வீடு வாங்க முற்பணம் (Down payment) திரட்டுவது, குழந்தைகளின் உயர்கல்வி, கல்யாணச் செலவுகள், பணி ஓய்வுக்காலச் செலவுகளுக்கான முதலீடுகள் ஆகியவை முக்கியமான நிதி இலக்குகள்.

**5. நிதித் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்**

ஆண்டுக்கு ஒருமுறை ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீடு பாலிசிகள் மற்றும் அவற்றின் கவரேஜ் தொகையை ஆய்வு செய்யவும். சம்பளம் தொடர்ந்து அதிகரித்திருக்கும் பட்சத்தில் 3-5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆண்டு சம்பளத்தைப் போல் சுமார் 15 மடங்குத் தொகைக்கு ஆயுள் காப்பீட்டு கவரேஜ் தொகையைப் பராமரித்து வர வேண்டும். இதேபோல், செலவு அதிகரிப்புக்கு ஏற்ப 3-5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அவசர கால நிதியை அதிகரிக்க வேண்டும். குழந்தைகள், வயதானவர்கள் இருக்கும் குடும்பங்களில் அவசர கால நிதி எப்போதும் ஆறு மாதச் செலவுத் தொகையை விட அதிகமாக இருப்பது அவசியம்.

நிதித் திட்டமிடலை மேற்சொன்னபடி மேற்கொள்ளும் போது அனைத்து நிதி இலக்குகளும் சுலபமாக நிறைவேறும் செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

357

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## மாதவிடாய்க்கு முன்னான அசௌகரியங்களை எவ்வாறு தடுக்கலாம்?

**மாதவிடாய்க்கு முன்பான அறிகுறித்தொகுதி என்றால் என்ன?**

இது பெண்களில் மாதவிடாய் ஏற்படுவதற்கு இரு கிழமைகளுக்கு முன்பான காலப்பகுதியில் ஏற்படும். சாதாரண நிலையிலும் வேறுபட்ட உடலியல் மற்றும் உணர்வு மாற்றங்களாகும். இவை மாதவிடாய் ஆரம்பித்தவுடன் குறைந்து நிற்கும் போது முற்றாக மறைந்து விடும்.

பெண்களில் 75% மானோர் இந்தப் பிரச்சினைக்கு தமது இனப்பெருக்கும் காலப்பகுதியில் உள்ளாகின்றனர். எனினும் 5-10% ஆன பெண்களை மிகக் கடுமையாக இது பாதிக்கிறது.

20 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட குறைந்தது ஒரு பிள்ளையாவது பெற்றவர்கள், மன அழுத்தம் குடும்பசகிதம் உடையோர், மன அழுத்த குடும்ப சகிதம் உடையோர், மனஅழுத்தம், உணர்வுப் பிரச்சினைகளுக்குள்ளான பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

30-40 வயதுகளில் காணப்படும் பெண்களே கடுமையான அறிகுறிகளை வெளிக்காட்டுகின்றனர்.

**இந்தப் பிரச்சினைக்கான அறிகுறிகள் எவை?**

அறிகுறிகளை இருவகைப் படுத்தலாம். களைப்பு, நித்திரைக் குழப்பம், தலையிடி,பசியில் ஏற்படும் மாற்றம், உடல் அங்கங்களில் வீக்கம், தோலில் மயிரில் ஏற்படும் மாற்றம், வலி மிகுந்த மார்பகங்கள், தாகம், நிறைகூடுதல், வயிற்று நோ, முகப்பரு.

உணர்வு மாற்றம் - மனநிலை மாற்றம், மன அழுத்தம், கோபம், பதகளிப்பு, உணர்வுத் தளம்பல், மனச்சிக்கல், முடிவெடுக்கும் தன்மையில் குழப்பம், அழுகை, மாறாட்டம், சமூகத்திலிருந்து ஒதுங்கல், கவனக் குறைபாடு, பாலியல் உணர்வில் மாற்றம்.

**இதற்கான காரணம் என்ன?**

இதற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.எனினும் மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் ஓமோன் மாற்றங்கள்,பெண்ணின் நிறை, உடற்பயிற்சி, மனநெருக்குதல் ஆகியன இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ளன. அதிகரித்த உடல்நிறை, குறைந்த உடற்பயிற்சி, அதிகளவில் உப்பு உள்ளடங்கிய உணவு, மதுபானம்,கோப்பி, அதிக மன நெருக்கடி இந்தப் பிரச்சினையை அதிகரிக்கச் செய்கின்றன.

**எனக்கு இந்தப் பிரச்சினை இருப்பதை எவ்வாறு தெரிந்து கொள்ளலாம்?**

இதற்கு விசேட பரிசோதனைகள் கிடையாது.மேற்கூறப்பட்ட அறிகுறிகள்

மாதந்தோறும் உங்கள் மாதவிடாய் சக்கரத்தின் பிற்பாதிக் காலப்பகுதியில் ஏற்பட்டு உங்களின் நாளாந்த வாழ்க்கையைப் பாதிப்பின் இந்தப் பிரச்சினை இனங்காணப் படலாம்.அறிகுறிகள் பற்றிய நாள் குறிப்பை ஒவ்வொரு மாதவிடாய்ச் சக்கரத்தின் போதும் பேணல்.

**எப்போது வைத்திய ஆலோசனையை நாட வேண்டும்?**

உங்களுடைய நாளாந்த வாழ்க்கை குழப்பமடையும் போது, கடுமையான அறிகுறிகள் தோன்றும் போது.

**இந்தப் பிரச்சினையை வராது தடுக்க முடியுமா?**

இல்லை தடுக்க முடியாது. ஆனால் வாழ்க்கை முறை மாற்றம் மூலம் இந்த அறிகுறிகளைக் குறைக்கலாம்.

**இந்தப் பிரச்சினைக்கான சிகிச்சை முறைகள் எவை?**

வாழ்க்கை முறைமாற்றம். தேவையான அளவு உடற்பயிற்சி செய்தல், சமநிலையான போஷாக்கான உணவுகளை உட்கொள்ளல், சீனி, உப்பு, கோப்பி, மதுபானம் போன்றவற்றை உட்கொள்வதைக் குறைத்தல் அல்லது நிறுத்துதல், அதிகளவு பழங்கள், மரக்கறி, தானியம், தீட்டாத அரிசி விதைகள் போன்றவற்றையும் கொழுப்பில்லாத மீன், இறைச்சி ஆகியவற்றையும் உண்ணுதல்.

கல்சியம் நிறைந்த உணவு, யோக்கட், பச்சைக்கீரை வகை போன்றவற்றைச் சேர்த்தல், கொழுப்பு, எண்ணெய்வகைகளைக் குறைத்தல். உணவுண்ணும் முறை / தடவைகளை மாற்றுதல் / (ஆறு தடவை சிறிதளவு உணவு அல்லது மூன்று முறை பிரதான உணவும் 3 முறை உபஉணவும் உட்கொள்ளல்.)

கல்சியம், மக்னீசியம், உயிர்ச்சத்து D.E.B6 நிறைந்த உணவு வகைகளை உண்ணுதல், தேவையானளவு நீர் பருகுதல், மன அழுத்தத்தைக் குறைக்கும் வழிவகைகளைக் கையாளுதல். (தியானம், யோகாசனம், இசை, மூச்சுப் பயிற்சி) ஒழுங்கான உறக்கம்.

வாழ்க்கைத் துணைக்கு இந்தப் பிரச்சினை பற்றி அறிவுறுத்தல், வைத்திய ஆலோசனையை நாடுதல்.(இங்கு பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் அதிக பக்கவிளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. எனவே வைத்திய ஆலோசனைப்படி கண்காணிப்பின் கீழ் பயன்படுத்தவும்.)

**எவ்வகையான உடற்பயிற்சிகள் நன்மை பயக்கும்?**

ஒழுங்கான காற்றுச் சுவாச உடற்பயிற்சிகள் களைப்பையும் மன அழுத்தத்தையும் நீக்கி புத்துணர்ச்சியூட்டக் கூடியன. வேகநடை, ஓடுதல், துவிச்சக்கரவண்டி ஓட்டம், நீச்சல் போன்றவற்றைச் செய்யலாம். ஒவ்வொரு நாளும் குறைந்தது 30 நிமிடம் செய்வது நல்லது.

**இந்தப் பிரச்சினைக்கு சத்திர சிகிச்சை முறையும் உண்டா?**

மேற்கூறிய சிகிச்சை முறைகள் பலனளிக்காவிடத்து சத்திர சிகிச்சையை நாடலாம்.நீங்கள் போதியளவு குழந்தைகளைப் பெற்ற பின் இரு சூலகங்களையும் அகற்றும் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளலாம். இதனால் சூலகங்களின் ஓமோன் குறைபாடு ஏற்பட்டு எலும்பு தேய்தல் போன்ற பிரச்சினைகள் தோன்றலாம்.

வைத்திய கலாநிதி
யோ.சிவகரன்

## நீரிழிவு உள்ளவர்கள் மண்ணிற சீனி பாவிக்க முடியுமா?

மண்ணிற சீனியை ஒரு அருமருந்து போல்வும் உடலுக்கு நன்மை பயக்கும் எனவும் போலியான மிகைப்படுத்தப்பட்ட விளம்பரப்படுத்தல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

மண்ணிற சீனியும் வெள்ளைச் சீனி போலவே நீரிழிவு, உடல்நிறை அதிகரிப்பு, உடம்பில் கொழுப்பு அதிகரிப்பு போன்ற தீயவிளைவுகளை ஏற்படுத்துகின்றது.

வெள்ளைச்சீனி போலவே மண்ணிற சீனியும் நீரிழிவு உள்ளவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே மண்ணிற சீனி ஒரு ஆரோக்கியமான உணவுப் பொருள் அல்ல. ஒப்பீட்டளவிலே வெள்ளை சீனியிலும் பார்க்க மண்ணிற சீனியில் சிறிதளவு ஊட்டச்சத்துக்களும் கனியுப்புக்களும் அதிகமாக இருக்கிறது என்ற ஒரு சிறிய விடயத்தை மூலதனமாக்கி மண்ணிற சீனிக்காக பாரிய விளம்பரப்படுத்தல்கள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக பல நீரிழிவு நோயாளர்களும் பொதுமக்களும் மண்ணிற சீனியை அதிகளவு பயன்படுத்த தொடங்கியிருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அவற்றுக்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பாச மலர்
பாடியவர் : தி .எம் .சௌந்திர ராஜன் – பி .சுசிலா
இசை : நஅ. எஸ் .வி – தி .கே .ஆர்
இயற்றியவர்: கண்ணதாசன்



மலர்ந்தும் மலராத பாதி மலர்
போல வளரும் விழி வண்ணமே
வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில் விளையாடி கொடியின் தலை·சீவி நடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொழிந்த தமிழ் மன்றமே

மலர்ந்தும் மலராத பாதி மலர் போல
வளரும் விழி வண்ணமே
வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில் விளையாடி கொடியின் தலை சீவி நடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொழிந்த தமிழ் மன்றமே

யானைப் படை கொண்டு
சேனைபல வென்று
ஆளப் பிறந்தாயடா
புவி ஆளப் பிறந்தாயடா
அத்தை மகளை மனம் கொண்டு
இளமை வழி கண்டு
வாசப் பிறந்தாயடா
அத்தை மகளை மனம் கொண்டு …
இளமை வழி கண்டு …
வாசப் பிறந்தாயடா

தங்கக் கடிகாரம் வைர மணியாரம்
தந்து மணம் பேசுவார்
பொருள் தந்து மணம் பேசுவார்
மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார் ..
உலகை விலை பேசுவார்
மாமன் தங்கை மகள்ான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்

நதியில் விளையாடி கொடியின் தலை சீவி
நடந்த இளம்தென்றலே
வளர் பொதிகை மலை
தோன்றி மதுரை நகர் கண்டு
பொழிந்த தமிழ் மன்றமே

சிறகில் எனை முடி அருமை மகள் போல
வளர்த்த கதை சொல்லவா
கனவில் நினையாத மயயடயஅ இடை வந்து பிரித்த
கதை சொல்லவா .. பிரித்த கதை சொல்லவா

கண்ணில் மணி போல மணியின் நிசல் போல
கலந்து பிறந்தோமடா
இந்த மண்ணும் கடல் வானும் மறைந்து
முடிந்தாலும் மறக்க முடியாதடா
உறவைப் பிரிக்க முடியாதடா
ம்ம்ம்மம்ம்ம்மம்ம்ம்
அன்பே ஆரிராரோ ஆரிராரோ ஆரிராராரிரோ
அன்பே ஆரிராரிரோ ..அன்பே ஆரிராரிரோ

# இறையதிகாரத்தில் மனித தலையீடு முறையற்ற ஒரு செயலாகும்

விருட்சங்கள் அமைதியாக இருந்தாலும் ஒருபோதும் காற்று அதை விடுவதாக இல்லை. காற்றினால் ஏற்படும் தங்களின் அசைவை விருட்சங்கள் தங்கள் செயலென எண்ணினால் அது விருட்சங்களினுடைய அகங்காரத்தின் வெளிப்பாடாக அமைந்து விடும். காற்றே விருட்சங்களின் அசைவுக்கு கர்த்தாவாக இருக்கும் போது விருட்சங்கள் தாங்களே கர்த்தாவென எண்ணுவது வெறும் மடமைத்தனமாகும்.

மேலே குறிப்பிட்ட விருட்சங்களின் உதாரணம் ஒரு வகையில் மனித குலத்தின் ஆன்மிக ஞானத்துக்கும் பொருந்தக் கூடியது. மனித ஆன்மா என்றும் அசைவற்றது. அதுவே பிறப்பு-இறப்பு அற்ற மனிதனின் எல்லையற்ற சுயமாகும். அந்த சுயத்தை மாயைக்குள் உட்படுத்த இயற்கையானது ஒருபோதும் தயங்கியதில்லை.

மனித ஆன்மாவின் கவசமாக இருக்கும் மனித சரீரமும் பஞ்சபூதங்களால் ஆன இயற்கையின் ஒரு பகுதியாகும். அதற்கும் இயற்கையைப் போல் தனிப்பட்ட இயக்கம் எதுவும் கிடையாது. அதுவும் ஈஸ்வர கடாட்சத்தில்தான் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அதற்கு கர்த்தா மனிதனல்ல. சர்வ வல்லமை பொருந்திய ஈஸ்வரனே தலைவன். பரமாத்மாவின் சிறு தெய்வீக பொறியான மனித ஆன்மா ஒருபோதும் செயலாற்றுவது இல்லை. இயற்கையின் லீலை செயலாற்றுவது போல் ஒரு போலிதோற்றப்பாட்டை மனித ஆன்மா மீது எப்போதும் உருவாக்கி வெற்றி கண்டு மனிதனை துயரத்தில் ஆழ்த்துகின்றது.

அதனால் ஒவ்வொரு மனிதனும் தன் சுயத்தின் உண்மை நிலையை அறியாததால் தானே செயல்களின் கர்த்தாவென எண்ணி விடுகின்றான். அவன் தன் சரீரத்தை விடுத்து தன் சுயத்தை உணர்ந்தால் மட்டுமே எல்லாம் ஒரு பகல் கனவென அவனுக்கு தெரிய வாய்ப்புண்டு.

மனித ஆன்மா இந்த பிரபஞ்சம் முழுவதும் வியாபித்து இருந்தாலும் தன் சுயத்தை இழக்காமல் தண்ணீரில் நனையாத தாமரை இலை போல் என்றும் தன்மயமாகவே இருக்கின்றது. அதை மனித சமூகம் அறிந்து கொள்ள ஒரு முயற்சியும் செய்யவில்லை. அப்படி அறிந்தவர்கள் கோடியில் ஒருவரே. இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுடைய பிறவிப் பிணிக்கான அரும் மருந்து அவனின் சொந்த ஆன்மாவாக மட்டுமே இருக்க முடியும். இதை உணர்ந்து விட்டால் நன்மையும் தீமையும் அற்ற ஆனந்த பரவச நிலையில் ஒவ்வொருவரும் திளைக்கலாம்.

அதனால்தான் ஈழத்து மகான் யோகர் சுவாமி அவர்கள் தனது நற்சிந்தனை பாடலிலே "நன்றெனத் தீதென நவில முடியாத நாதன்றால் சேர்ந்தேனடி குதம்பாய்" என்று மிக ஞானத் தெளிவுடன் பாடுகின்றார். அதாவது நன்மையையும் தீமையையும் கடந்த அந்த பரமாத்மாவை மனிதனாகிய ஜீவாத்மா உணருவதே பற்றற்ற ஒரு ஆன்மிக நிலை தான் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகின்றது.

நான் உடலல்ல, மனமல்ல, புத்தியல்ல, சித்தமல்ல நான் ஆன்மா என்று திடமாக ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கும் வரை அல்லது உணரும் வரை அவன் பாவம்-புண்ணியம் என்ற சுழிக்குள் அகப்பட்டு மீள முடியாத ஒரு சூழலுக்குள்தான் அவன் வாழ்ந்து தன் கணக்குகளை தீர்க்க வேண்டி இருக்கின்றது.

மனிதர்களுக்குள்ளால் நடைபெறும் இயற்கையினுடைய ஈஸ்வர செயலை ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தனிப்பட்ட செயலென எண்ணும் போது அந்த செயல்களின் விளைவுகளிலேயே மனிதர்கள் கட்டுண்டு போகிறார்கள். அந்த விளைவுகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அல்லது அதை அனுபவித்து தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் மனிதன் தன் அகங்காரத்தின் நிமித்தம் தள்ளப்படுகின்றான்.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஆன்மாவாக உணரும் போது பொதுநலம் பொருந்திய உண்மையானவனாகவும் தன்னை சரீரமென எண்ணும்போது சுயநலம் பொருந்திய பொய்யானவனாகவும் இந்த உலகத்துக்கு காட்சி கொடுக்கின்றான்.

மனித ஆன்மாவின் ஆழத்திலிருந்துதான் அளவிட முடியாத அன்பு பிறக்கின்றது. அது மாபெரும் பிரேமையாக மாற்றமடைந்து இந்த உலகமெங்கும் நன்மையை விரிவாக்கம் செய்கின்றது. அதிலிருந்து ஒரு மனிதனின் கர்மா கரைந்து அவனை பற்றற்ற ஞானியாக்கி அகங்கார நான் என்ற முனைப்பை இல்லாமல் செய்து அர்ப்பண நான் என்ற தெய்வீக செயலை உருவாக்கி இறைவனுக்கு வழி விடுகின்றது. செயல்களைச் செய்யும் அதிகாரமே மனிதனுக்குரியது. அதை தன் செயலென எண்ணுவதும் அதன் விளைவுகளில் பற்று வைப்பதும் மனிதனுக்கு எப்போதும் அதிகாரமற்ற ஒன்றாகும். மனித செயல்களின் கர்த்தாவாக இருப்பதும் அதன் விளைவுகள் மீது முழுமையான கவனம் செலுத்துவதும் இறைவனின் அதிகாரமாகும். அவனின் அதிகாரத்தில் மனித குலம் தலையிடுதல் முறையற்ற செயலாகும். இதை உணர்ந்தால் மட்டுமே மனித குலம் அகங்காரத்தினால் விளையும் கர்ம வினைகளிலிருந்து ஓரளவாவது தப்பிப் பிழைக்க முடியும்.




**சாம் - ரமேஸ்குமார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2023 - 17.08.2023



**உழைப்பையே மூலதனமாக்கி செயற்படும் கும்ப இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி, வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை பதிந்த செவ்வாய், சனியைப் பார்க்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். மன நிலையில் மாற்றம் ஏற்படும். தொடக்கத்தில் வேகமாகச் செய்த வேலையை நிறுத்தி விடுவீர்கள். பல வேலைகள் அரைகுறையிலேயே நிற்கக்கூடும். எனவே திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடி செய்ய இயலாது. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். வழிபாட்டின் மூலமே வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுப கிரகமான குரு பகவான், இப்பொழுது மேஷ இராசியில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். தன - லாபாதிபதியாக விளங்கும் குரு பகவான் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். அதேநேரம் ராகுவோடு இணைந்திருப்பதால், குருவால் ஓரளவே நன்மை செய்ய இயலும். அவரது பார்வை 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களில் பதிகின்றது. எனவே அந்த இடங்கள் புனிதமடைகின்றன. 7 ஆம் இடம் களத்திர ஸ்தானம் என்பதால் குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர். கடுமையாக முயற்சித்தும் முடிவடையாத திருமணங்கள் இப்போது நடைபெறும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானம் கிடைக்கலாம். குருவின் பார்வை 9, 11 ஆகிய இடங்களில் பதிவதால் பாக்கிய ஸ்தானமும் லாப ஸ்தானமும் புனிதமடைகிறது. எனவே தந்தை வழியில் ஆதரவு கிடைக்கும். முன்னோர்கள் கட்டி வைத்து சிதிலமடைந்த கோவில்களைப் புதுப்பித்து திருப்பணிகள் செய்வீர்கள். வாகனங்கள் வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். லாபஸ்தானம் பலம் பெறுவதால் வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இதுவரை கேட்டும்




கிடைக்காத சலுகைகள் இப்பொழுது கிடைக்கும். வரும் வாய்ப்புகள் எல்லாம் வளர்ச்சிக்குரியவை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## தந்தை வழியில் ஆதரவு கிடைக்கும்!

**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம - அஷ்டமாதிபதியானவர் புதன். அவர் களத்திர ஸ்தானத்திற்கு வரும் பொழுது பிள்ளைகளின் திருமணப் பேச்சுக்கள் திடீரென முடிவாகும். வெளிநாடு சென்று படிக்கவோ, வேலை பார்க்கவோ நினைக்கும் தங்களின் பிள்ளைகளுக்கு அது கைகூடும். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு இணக்கமாக நடந்து கொள்வர். தொழில் வளர்ச்சியில் இருந்த குறுக்கீடுகள் அகலும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குத் தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் பெறுவதற்கான அறிகுறி தென்படும். கலைஞர்களுக்கு பொறுமையும் நிதானமும் தேவை. மாணவ - மாணவியர்கள், படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. பெண்களுக்கு எதையும் யோசித்து செய்ய வேண்டிய காலகட்டம். ஆரோக்கியத் தொல்லை உண்டு. வீண் பழிகளுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவ்புரி சிங்காரம்**



**மனதில் பட்டதை மறைக்காமல் பேசும் மீன இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதனான குரு, தன ஸ்தானத்தில் ராகுவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றாலும் வக்கிர இயக்கத்தில் சனி இருக்கிறார். எனவே வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். வீடு மாற்றம், இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை வரலாம். வரும் மாற்றங்கள் ஏற்றம் தருவதாகவே அமையும். கூட்டு முயற்சியில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுபகிரகமான குரு பகவான், இப்பொழுது மேஷ இராசியில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் அவரது பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே உத்தியோகத்தில் உயர்பதவிகள் வரலாம்.

உற்ற துணையாக இருக்கும் நண்பர்கள் சுயதொழில் செய்யும் வாய்ப்பையும் உருவாக்கிக் கொடுக்கலாம். கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். கடன்சுமை குறைய எடுத்த புது முயற்சி வெற்றி பெறும். எதிரிகளால் ஏற்பட்ட இன்னல்கள் அகலும். இடமாற்றம் இனிமை தரும். நீண்டநாட்களாக உடலோடு ஒட்டி உறவாடி இருந்த நோய் அகலும். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். குருவின் பார்வை 8, 10 ஆகிய இடங்களில் பதிவதால், கரைந்த சேமிப்புகளை ஈடு கட்ட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பழைய பங்குதாரர்களோடு ஏற்பட்ட பிரச்சினை அகலும். ஒரு சிலர் வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் திரும்பி, அங்கேயே தொழில் செய்ய முன்வருவீர்கள். தனவரவு திருப்தி தரும். தன்னம்




பிக்கையோடு செயற்பட்டு வெற்றிக் கொடி நாட்டுவீர்கள். தள்ளிப்போன காரியங்கள் அனைத்தும் தானாக நடைபெறும்.

## தொழில் வளம் சிறப்பாக அமைய நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்!

**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்திற்கு வரும் பொழுது நன்மை செய்யும் என்பார்கள். அந்த அடிப்படையில் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். உறவினர் பகை அகலும். உத்தியோகத்தில் அதிகார அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவீர்கள்.

பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். புகழ் மிக்கவர்களின் நட்பால் தகராறுகள் தானாக விலகும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கலைஞர்களுக்கு எடுக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். மாணவ - மாணவிகளுக்கு படிப்பில் முன்னேற்றமும் ஆசிரியர்களின் ஆதரவும் உண்டு. பெண்களுக்கு பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால் நம்முடைய துன்பங்களை சகிக்கக் கற்றுக்கொள்கின்றோம். -மார்க் ட்வைன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குருதிப் பரிசோதனைகளை வெளியில் செய்யுமாறு கூறுவது...

நம் நாட்டில் உள்ள இலவச சேவை என்பது பல்வேறு சவால்களுக்கு உட்பட்டு வருகிறது.

குறிப்பாக மருத்துவம், கல்வி ஆகிய இரு சேவைகளும் இலவச சேவைகளாக அரசாங்கத்தால் வழங்கப்படும் அதேநேரம், இந்த இரண்டு சேவைகளும் தனியார் துறையாலும் வழங்கப்பட்டு வருகின்றன.

பரவாயில்லை, உதாரணத்துக்கு பொருளாதார வசதி குறைந்தவர்கள் அரச வைத்திய சாலைகளை நாடும்போது, பொருளாதார வசதி உடையவர்கள் தனியார் வைத்திய சாலைகளில் சேவைகளைப் பெற்றால் அரச, தனியார் வைத்தியசாலைகள் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் இயங்கும் எனத் தர்க்கிக்கலாம்.

இதை நாம் கூறும்போது, தனியார் வைத்தியசாலைகளுக்கென தனியான மருத்துவர்கள் இருக்கிறார்களா என்ன?

தனியார் வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற மருத்துவர்களும் அரச மருத்துவர்களாகவே இருப்பதனால், ஒரே நேரத்தில் இரண்டு வைத்திய சேவைகளும் சிறப்பாக இயங்கும் எனக் கூறமுடியாது என நீங்கள் யாரேனும் வாதிடலாம்.

இருந்தும் அந்த வாதத்தில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டிய தேவையில்லை. ஏனெனில் நம் நாட்டில் மருத்துவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. அதிலும் தற்போது, இருக்கின்ற மருத்துவர்களும் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

இதனால் ஏற்படக்கூடிய மருத்துவர்களின் பற்றாக்குறை என்பது பொதுமக்களைக் கடுமையாகப் பாதிக்கவுள்ளது.

ஆக, என்றைக்கு மருத்துவர்களின் எண்ணிக்கை தாராளமாக இருக்கிறதோ அப்போதுதான் தனியார் வைத்தியசாலைகளில் அரச மருத்துவர்கள் அல்லாத மருத்துவர்கள் பணியுரியக்கூடிய நிலைமை ஏற்படும்.

ஆனாலும் இந்நிலைமையானது இப்போதைக்குச் சாத்தியப்படப் போவதில்லை என்பதால், அந்த விடயத்தை இப்போதைக்கு நாம் ஒத்திவைக்கலாம்.

மாறாக, நாம் இங்கு கூறவந்த விடயம், அரச மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்களின் குருதிப் பரிசோதனைகளை வைத்தியசாலைக்கு வெளியில் தனியார் ஆய்வுகூடங்களில் செய்யுமாறு கூறப்படுவது பற்றியதாகும்.

ஆம், பொதுவில் அரச வைத்தியசாலைகளை நாடுவதற்கான காரணங்களுள் பொருளாதார சூழ்நிலைகளும் அடங்குகின்றது.

இந்நிலையில் அரச மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு செய்யப்பட வேண்டிய குருதிப் பரிசோதனையை தனியார் ஆய்வுகூடங்களில் செய்து தருமாறு கூறும்போது அந்த நோயாளியும் அவரது குடும்பமும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுகிறது.

எனவே அரச மருத்துவமனைகள் இவ்வாறான நெருக்கடிக்கு நோயாளர்களை ஆளாக்காமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

சிலவேளைகளில் குறித்த குருதிப் பரிசோதனைக்குத் தேவையான ஆய்வுகூட மருந்துகள் இல்லையாயின், அவற்றை பெற்றுக் கொள்வதில் பொது அமைப்புகள் மற்றும் தனிப்பட்ட பரோபகாரிகளின் உதவியை நாடுவது அவசியமாகும்.

இதைச் செய்யாதவிடத்து, அரச மருத்துவமனைகளுக்கு நோயாளர்கள் வருவது கணிசமாகக் குறைவடைவதுடன் அந்த நோயாளர்கள் சிகிச்சை கிடைக்காமல் அவஸ்தைப் படுகின்ற பரிதாப நிலைக்கும் ஆளாகுவர்.

ஆகையால் முடிந்தளவில் அரச மருத்துவமனைகள் முற்றுமுழுவதுமாக இலவச சேவையை வழங்க வேண்டும்.

# பாராளுமன்ற அனுமதியின் பின்பே இலங்கை - இந்திய ஒப்பந்தம் அமுல்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(புதுடில்லி)

பாராளுமன்றம் அனுமதி வழங்கிய பின்னரே இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பிலும், விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பிலும் வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அரசாங்கங்களுக்கிடையில் மாத்திரமன்றி, தனியார் துறையினருக்கிடையிலும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பின்னணியை உருவாக்குவது தொடர்பில் இந்தியாவுடன் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கூறினார்.

வடக்கில் மீனவர்களால் மேற்கொள்ளப்படும் இழுவைமடி மீன்பிடியை நிறுத்துவது தொடர்பிலும், இலங்கை மீனவர்களுக்கு அரபிக் கடலுக்கு செல்வதற்கான அனுமதியை வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

பரஸ்பர பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத விடயங்களை மேற்கொள்வது தொடர்பில் இருதரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட இணங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலை மாவட்டத்தை முழுமையாக உள்ளடக்கிய வகையில் அல்லது அதன் ஒரு பகுதியை உள்ளடக்கிய வகையில், பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வது என்பது குறித்து அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறினார்.

துறைமுக அபிவிருத்தி, எண்ணெய் குதங்களின் அபிவிருத்தி, பிராந்திய வலுசக்தி மைய அபிவிருத்தி, கைத்தொழில் பூங்கா நிர்மாணம் உள்ளிட்ட விடயங்களில் எவ்விதமான அபிவிருத்தியை மேற்கொள்வது என்பது தொடர்பில் அரசாங்கம் தீர்மானிக்கும் எனவும் இலங்கை உரிய விடயம் தொடர்பில் தீர்மானித்ததன் பின்னர் இந்தியா ஆர்வம் செலுத்தும் விடயங்களில் அரச அல்லது தனியார் துறையினரின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

இதனிடையே, இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டு அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-7)

# இலங்கை - இந்திய பாலம் தொடர்பில் ரணிலே முதலாவதாக முன்மொழிந்தார்

## இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நில இணைப்பு குறித்து முதலாவதாக இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முன்மொழிந்தார் என இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் மோகன் குவாத்ரா தெரிவித்துள்ளார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவே 2002 மற்றும் 2004 க்கு இடையில் பிரதமராக இருந்தபோது இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் அமைப்பதற்கான முன்மொழிவைக் கொண்டு வந்தார் என தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த இந்திய வெளிவிவகாரச் அமைச்சின் செயலாளர், இந்திய இலங்கை இணைப்புத் திட்டங்களைப் பொறுத்த வரை இலங்கை ஜனாதிபதியினால்இந்த யோசனை முன்மொழியப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இரண்டு நாட்டு தலைவர்களும் இதனை முன்னோக்கி எடுத்துச் செல்ல ஒப்புக்கொண்டனர் எனவும் இரு நாடுகளுக்கும் இடையிலான நில இணைப்பு குறித்து ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வின் மூலம் இரு தரப்பும் அதை முன்னெடுத்துச் செல்ல இணங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# மண்டைதீவு வேப்பந்திடலில் இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் ஆகஸ்ட் 01 திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-7)

# திருகோணமலை பிராந்திய மையமாக மேம்படுத்தப்படும்

## இந்திய வெளியுறவு செயலாளர்

(புதுடில்லி)

இந்தியாவும் இலங்கையும் திருகோணமலையை பிராந்திய மையமாக மேம்படுத்தவுள்ளதாக இந்திய வெளியுறவு செயலாளர் வினய் குவாத்ரா தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் இடம்பெற்ற இந்திய வெளிவிவகார அமைச்சின் வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இதற்கான இணக்கம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, இலங்கையில் உள்ள திருகோணமலை நகரை ஒரு பிராந்திய மையமாக மேம்படுத்துவதற்கு இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஜானதிபதி தேர்தலில் சஜித் போட்டியிடமாட்டார்

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் என சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவின் வேட்புமனு எதிர்வரும் காலங்களில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். அறிவிப்பு வெளியானதும், சில பெரிய மாற்றங்களை பொதுமக்கள் எதிர்பார்க்கலாம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார். அதற்குப் பதிலாக கடந்த ஆண்டு தேர்தலின் போது அவர் செய்ததைப் போல டலஸ் அழகப்பெருமவின் வேட்புமனுவுக்கு ஆதரவளிப்பார்.

சஜித் பிரேம்தாசவால் மீண்டும் தேர்தலில் தோல்வியடைய முடியாது, எனவே அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டார்.

நாட்டைக் காப்பாற்ற கடந்தாண்டு ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார் என்பது மக்களுக்குத் தெரியும். கடந்த ஆண்டிலிருந்து கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்லவும், நீண்டகால மற்றும் நிலையான அபிவிருத்திக்கான மேடையை அமைப்பதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாலே முடியும் என தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் குடும்பஸ்தரை சுட்டுக் கொன்றவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, நெடுங்கேணி பொலிஸ் பிரிவில் பட்டிக்குடியிருப்பு கிராமத்தில் ஒருவரை சுட்டுக் கொன்ற சந்தேகநபர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டதாக நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, பட்டிக் குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை அழகையா மகேஸ்வரன் என்பவர் இடியன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

விவசாயியான அவர், தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது, பக்கத்து தோட்டத்தில் நின்ற ஒருவருடன் ஏற்பட்ட தகராறையடுத்து இந்த கொலை நடந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவருக்கும் கொலையாளிக்குமிடையில் தோட்ட எல்லை தொடர்பாக நீண்ட காலமாக முறுகல் காணப்படுகிறது. நேற்றும் முறுகல் ஏற்பட்டுள்ளது. அப்போது, மகேஸ்வரன் மீது கொலையாளி கல் வீசி தாக்கியுள்ளார். இதனால் கோபமடைந்த மகேஸ்வரன், மண்வெட்டியை எடுத்துக் கொண்டு விரட்டிச் சென்றுள்ளார்.

தப்பியோடியவர் பக்கத்திலுள்ள தனது வீட்டுக்கு சென்று, அங்கிருந்த இடியன் துப்பாக்கியை எடுத்து வந்து சுட்டதில், மகேஸ்வரன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்த இருவரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள். மகேஸ்வரன் யுத்தத்தின் பின் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

குற்றவாளி கடந்த வாரம் சட்டவிரோதமாக இடியன் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். 20ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தால் அவருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது.

அன்றைய தினமே தண்டப்பணத்தை செலுத்தி விட்டு வந்து, மற்றொரு இடியன் துப்பாக்கியை பெற்று அதன் மூலமே சூடு நடத்தியுள்ளதாக அறிய முடிகிறது. (4-250)

# பொலிஸ்மா அதிபர் கிளிநொச்சிக்கு விஜயம்



(தருமபுரம்)

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது வடமாகாண சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் மற்றும் வடமாகாணத்தில் உள்ள 61 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்மேற்கொண்டனர். (4-316)

# இலங்கையை இந்தியா தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் - சுரேஸ்

(கொழும்பு)

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவண செய்ய வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு தரப்பு என்ற அடிப்படையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு முழுமையான தார்மீக உரிமை இருக்கிறது என்பதை இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

எமது கடிதத்தில் தெரிவித்திருந்ததைப் போன்றே இந்தியப் பிரதமர் மோடி ஜனாதிபதி ரணிலுக்கு மேற்கண்ட விடயங்களைத் தெளிவாக எடுத்துரைத்திருந்தது மாத்திரமல்லாமல், இலங்கை தமிழ் மக்கள் கண்ணியமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு அவர்களது அபிலாஷைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட வேண்டும்.

அதற்கு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, மாகாணசபை தேர்தல்களை நடாத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதுடன் அதனை இலங்கை அரசு செய்யும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக டெல்லியில் ஒப்புக்கொண்டாலும் மாறிமாறி ஆட்சி செய்யும் இலங்கை அரசாங்கங்கள் அதனை இழுத்தடித்து வருவதையே நாங்கள் பல காலமாகப் பார்த்து வருகிறோம்.

பல்வேறு காரணங்களைக் கூறி அதை நடைமுறைப்படுத்துவதிலிருந்து தப்பித்து வருவதையும் பார்த்திருக்கின்றோம். இந்த முறையும் அவ்வாறில்லாமல், அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு இந்தியா ஒரு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என்பதுடன், குறிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் இவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட வேண்டும் என்றும் நாம் கோருகிறோம் எனத் தெரிவித்துள்ளார். (4)

# இலங்கைக்கு கடத்தவிருந்த 400 லீற்றர் பெற்றோல்

## தமிழகத்தில் பறிமுதல்

(கொழும்பு)

தமிழகம் தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 400 லீற்றர் பெற்றோலை வடபாகம் பொலிஸார் நேற்று பறிமுதல் செய்துள்ளனர்.

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையில் வடபாகம் தனிப்படை பொலிஸார் நேற்று கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு ஒன்றை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, 9 கொள்கலன்களில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 400 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், குறித்த பெற்றோலை இலங்கைக்கு கடத்த திட்டமிடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 550 | 500 |
| தக்காளி | 350 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 220 | 280 |
| கோவா | 300 | 220 | 300 | 300 |
| கரட் | 350 | 500 | 500 | 550 |
| பூசணி | 140 | 100 | 100 | 150 |
| புடோல் | 160 | 140 | 150 | 100 |
| வாழைக்காய் | 180 | 150 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 450 | 380 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 | 150 |
| பாகற்காய் | 350 | 300 | 400 | 500 |
| வெண்டக்காய் | 200 | 150 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 250 |
| லீக்ஸ் | 280 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 350 | 400 |
| கறிமிளகாய் | 300 | 300 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 300 | 300 |
| போஞ்சி | 500 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | 280 | 280 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 350 | 320 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 40 |
| வல்லாரை | 50 | 180 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | 150 | 120 |

# பணவீக்கம் மாத இறுதியில் ஒற்றை இலக்கத்திற்கு குறையும்

## மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

நாட்டின் பணவீக்கம் இந்த மாத இறுதியில் ஒற்றை இலக்கத்திற்கு குறையும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய மத்திய வங்கிச் சட்டம் இறுதியாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தற்போது அது சட்டமாகியுள்ளது.

உள்நாட்டு விலை ஸ்திரத்தன்மை மற்றும் நிதி அமைப்பு ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் பொறுப்பு எமக்கு அதிக சுதந்திரத்தையும் வலுவான பொறுப்புக் கூறலையும் வழங்கியுள்ளது.

குறிப்பாக நிதிக் கொள்கைக்கும் பணவியல் கொள்கைக்கும் உள்ள வேறுபாடு குறித்து குழப்பம் நிலவியது.

மேலும் நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளது என சிலர் பாராளுமன்றத்தில் கூறுவதை கேட்டேன்.

அவர்கள் பொது மக்களின் நிதி அதிகாரத்தைப் பற்றி பேசுகிறார்கள். நாட்டின் நிதிக் கொள்கை பற்றி அல்ல. இதே வேளை தற்போது புதிய கட்டமைப்பை பெற்றுள்ளோம்.

இந்த மாத இறுதிக்குள் ஒற்றை இலக்க பணவீக்கத்தை எட்டுவதற்கான பாதையில் இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீசாலையில்...

என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி ரயில் கடவையில் ஒலி, ஒளி சமிக்ஞை விளக்குகள் உள்ள போதிலும் வீதித் தடை இல்லாமையால் கவனக்குறைவு காரணமாக விபத்து நேர்ந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30,33,104)

## விபரீத முடிவெடு...

ழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் மூன்று பிள்ளைகளின் தந்தையான அழகன் அஜந்தன் (வயது-39) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் மேற்கொண்டார். (ம-7,60)

## தமிழர்களுக்...

விஜயத்தினை நேற்று முன்தினம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன், குறித்த பயணத்தில் இணைந்து கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்திய பிரதமரினால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியல் சூழலை நன்கு புரிந்து வைத்துள்ள இந்தியப் பிரதமர், தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தாத வகையில் அரசியலமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டமான மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருக்கும் திட்டத்தில் காணப்படும் நியாயத்தினை ஏற்றுக்கொண்டதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கிச் செல்வதன் மூலமே தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க முடியும் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (ம-7)

## 1983ஆம் ஜூலை...

இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்ததுமான ஒரு துன்பியல் நிகழ்வாகும் இது தமிழீழ விடுதலைப் புலிகள் 13 இலங்கை படையினரை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் படுகொலை செய்ததன் தூண்டுதல் விளைவு எனப்பட்டபோதும், இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட செயற்பாடாகவே நம்பப்படுகிறது. கறுப்பு யூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.

வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள் ஜூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை நிகழ்வுகளின் போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வைக் குறிக்கும். இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் எவரும் இதுவரையில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 13வது திருத்தச்...

போது, 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல், எரிசக்தி மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தின் மேம்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது," என்று அவர் கூறினார். (ம-7)

## யாழ். மாவட்ட...

திரிபோஷா பொதிகளில் சுமார் 30 பைகள் களவாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் திரிபோஷா மாவுக்கு தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் அதனை சாட்டாக வைத்து அடுத்த முறை கிடைக்கும் என திரிபோஷா வழங்கப்படாத தாய்மார் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த திரிபோஷா பொதிகள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் களவாடப்படாத நிலையில் அதனை மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கொண்டு சென்றவர்களும், அதனை அனுப்பியவர்களும் களவாடியதாக அறியக்கிடைத்துள்ளது. (ம-7)

## அரச வணிகங்...

போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச வர்த்தகங்களை மறுசீரமைப்பது தொடர்பான வியங்களை நிதி அமைச்சின் விசேட குழு ஆராய்ந்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், "அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு செய்யப்படுவதை நாங்கள் பகிரங்கப்படுத்தியுள்ளோம். அதன்படி, அமைச்சரவை மறுசீரமைப்புக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக நிதி அமைச்சகத்தின் கீழ் தனி பிரிவு நிறுவப்பட்டுள்ளது. அந்த பிரிவின் அதிகாரிகள் தற்போது மற்ற அரச நிறுவனங்களுடன் மிகவும் பொருத்தமான மறுசீரமைப்பு முறை குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்."

"எனவே நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் சென்றால், அரச வணிகங்களை நடத்துவதற்கு திறைசேரியில் இருந்து பணத்தை வழங்க முடியாது. இரண்டாவது விடயம், எதிர்காலத்தில் எழும் சவாலான பொருளாதார நிலைமைகளைத் தாங்கும் வகையில் அரச வணிகங்கள் மாற வேண்டும். அதன்படி, பல வழிகளில் அரச வணிகங்களை மறுசீரமைக்க நாங்கள் உத்தேசித்துள்ளோம்.

அந்த அனைத்து மறுசீரமைப்புகள் குறித்தும் பாராளுமன்றத்திற்கு தெரிவிக்கப்படும்" என்றார். (ம-7)

## ரணில் இந்தியா...

குழு உறுப்பினர் ஜூவான் ஜியா சுன் தலைமையிலான இந்த குழு மகிந்த ராஜபக்ஷவின் இருப்பிடத்திற்கு சென்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய ஜனாதிபதி, எதிர்வரும் 26ஆம் திகதி 13ஆம் திருத்தச்சட்டம் தொடர்பிலான அனைத்துக்கட்சி கூட்டத்தினை நடத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் ரணிலின் இந்திய விஜயத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாலம் அமைக்கும் விவகாரத்தை இந்திய பிரதமர் மோடி பகிரங்கப்படுத்தியிருந்தாலும், அதற்கான ஆரம்பப் பேச்சை எடுத்துரைத்தவர் ரணில் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-7)


Lucky 7 லக்கி 7
திகதி 22.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 009
L7 இலக்கம் 11
வெற்றி இலக்கினம் மேடம்
வெற்றி இலக்கங்கள் 6 2 9 5 6 6

தன நிதானய
திகதி - 2023.07.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1213
I 23 34 35 39 I

கொவிசெத
திகதி 2023.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 3425
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 22 23 27 56
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1531
H 12 35 36 47 80

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 492
கடகம் 07 18 21 61 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/22
சீட்டிழுப்பு இலக்கம் 5183
P 6 2 2 7 1 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2157
வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.22
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 20 25 42 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,731,892.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 22 28 45 74 K
DLB

சனிதா
திகதி 2023.07.22 வெற்றி வாரம் 4318
வெற்றி இலக்கங்கள் 16 20 30 69 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,880,132.00
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 17 26 54 74 M
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3869
வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.22
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 37 39 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,782,740/-
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 22 23 33 56
DLB

கப்ருக
திகதி 2023.07.22 வெற்றி வாரம் 1333 வர்ணம் சிவப்பு
F 05 05 18 66 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 419,734,114.20
"இரண்டாவது வாய்ப்பு" வெற்றி இலக்கங்கள் 24 41 47 67 N
DLB தொலை பேசி: 011-2 333 545-47 Web : www.dlb.lk

சංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 613 திகதி 2023-07-22 வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 08 15 52 விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 22,110,264.00
DLB DEVELOPMENT LOTTERIES Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 1983
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.07.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 59,384,934/-
வெற்றி இலக்கங்கள் 13 15 35 49 B
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 01 26 41 50 D
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg சீனி | - 231/= | (max 2Kg) |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg கோதுமை மா | - 185/= | (max 5Kg) |
| 1 Kg prima கோதுமை மா | - 198/= | |
| 1 Kg அரிசி மா | - 169/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 148/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 281/= | (max 3Kg) |
| 1 Kg மல்லி No.1 | - 450/= | |
| 10 Kg விஜிதா நாடு அரிசி | - 1820/= | |
| 400 g Nestomalt box | - 799/= | |
| Kottumee noodles | - 119/= | |
| அங்கர் யோகட் | - 50/= | |

(16390)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant). 'கிளிப்' போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

**கம்சியா**

பற்சிகிச்சைப் பிரிவில்
(யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக, BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது.
578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-6954)

077 375 4490
077 220 2769

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

T.P: 077 544 8503

## காணி விற்பனைக்கு

- நீர்வேலி பகுதியில் நல்ல சூழலில் வீட்டுடன் நான்கு பரப்பு காணி விற்பனைக்குண்டு.
- நீர்வேலி கரந்தன் பகுதியில் நல்ல சூழலில் வடக்கு வாசல் வீடுகள் அமைக்கக் கூடிய மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.

(16350)

076 796 0056

## பணியாளர் தேவை

226, Main Street Jaffna இல் இயங்கி வருகின்ற VV Mart Food City க்கு உடனடியாக பணியாளர் தேவை.

1. Accounting Clerk (A/L இல் Commerce படித்தவர்கள் விரும்பத்தக்கது.)
2. Sales Representative. (Full Time/ Part Time)
3. Cleaning Staff.
4. Packing Staff.

கட்டாயமாக சுயவிபரக்கோவையுடன் நேரில் வருகை தரவும்

(16366)

077 555 2142

## காணி விற்பனைக்கு

**கோண்டாவில் பலாலி வீதியில் இருந்து 100m தூரத்தில் 17 பரப்பு குளி 17.3 காணி விற்பனைக்கு உண்டு.**

வீடு கட்டுவதற்கு
களஞ்சியசாலைக்கு
நிறுவனங்களுக்கு உகந்த இடம்

(16372)

076 821 9414

## வீடு விற்பனைக்கு

கரணவாய் கிழக்கு கரவெட்டியில் 3 பரப்பு 1 குளியில் 5 அறைகள், 3 கோல் உடன் நல்ல நிலையிலுள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு -

(16379)

077 484 3332

## வேலையாட்கள் தேவை

யாழில் பிரபல நகைக்கடைக்கு அனுபவம் வாய்ந்த விற்பனைப் பிரதிநிதிகள் தேவை (ஆண் ,பெண்)

தொடர்பு : (16383)

077 773 0567

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

இடம் : உரும்பிராய் கிழக்கு
வீட்டு வேலைகளுக்கும் சமையல் வேலைகளுக்கும் பெண் வேலையாளர் தேவை.

தொடர்பு : (16390)

077 121 5548

## UK visa tier 2 and tier 4

have you been called for uk visa tier 2 or tier 4 interview. training ,interview techniques and pre trial preparation be provided though zoom

(16388)

contact. Raj 077 768 7821

## OLD PARTS SALES

மொத்தமாக எடுப்பவர்கள் மட்டும்.

NISSAN R2 TOWN ACE 2 C
INJETOR PUMP
AULTINATOR AND MOTOR
JAPAN

(16352)

077 642 6390
077 221 1076

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

(C-6559)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777

## WORK IN CANADA

## WORK PERMITS

### COMPUTER TECHNICIANS

COMPUTER சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

- ✓ 2 YEAR WORK PERMITS
- ✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- ✓ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

(C-6956)

CIMS COLLEGE 0777-068-777

## மணமகள் தேவை

யாழ் R.C மதத்தைச் சேர்ந்த தனியார் வங்கியின் வாகன பொது காப்புறுதி உத்தியோகத்தராக பணியாற்றும் 1986 ஆம் ஆண்டு பிறந்த மிதுனராசி திருவாதிரை நட்சத்திரம் 76 பாவமுடைய கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

(16387)

077 008 3491

## மணமகன் தேவை

யாழ் R.C மதத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பிறந்த அரச தொழில் புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. யாழில் வசிப்பவர் விரும்பத்தக்கது. கிரகபாவம் 19 3/4 விருச்சிக ராசி நட்சத்திரம் அனுசம்.

(16387)

076 260 5156

## காணி விற்பனைக்கு

நந்தாவில் அம்மன் கோவிலடி கோண்டாவில் காணி விற்பனைக்குண்டு.

(16383)

077 773 0567

## விற்பனைக்கு



(16383)

077 773 0567

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் 45 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- செம்மண், நன்னீருற்று
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதியிலிருந்து 1km தூரம்
- நிலப்பரப்பு
- ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் (650,000/=)
- நிலாவரை கிணற்றிலிருந்து 2Km தூரம்

(16374)

076 057 0354
076 826 0354

## காணி விற்பனைக்கு

நாவற்குழி 85 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு

(16383)

077 773 0567

## காணி விற்பனைக்கு

இராச பாதை வீதியில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு

(16383)

077 773 0567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.